
பாவங்களிலிருந்து! வியாதிகளிலிருந்து! பிரச்சனைகளிலிருந்து!

JESUS REDEEMS MINISTRIES

# இயேசு விடுவிக்கிறார்


மரம் : 37 கனி : 1 ஜனவரி - 2016

சகோ. மோகன் சி. லாசரஸ்



## நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்.

யோசுவா 1:5.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சகோதரனிடமிருந்து...

**இ**யேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில், உங்களுக்கு என் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

புதிய வருடத்தைக் காணச் செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! இந்த 2016ம் வருடத்திற்கு, கர்த்தர் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தத்தை உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்.

கர்த்தர் கொடுத்த வாக்கின்படியே, "மோசேயோடே கூட இருந்ததுபோல, கர்த்தர் உங்களோடும் கூட இருந்து, உங்களை வழி நடத்த உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்திற்காகவும் ஜெபிக்கிறோம். கர்த்தர் உங்கள் முழுக் குடும்பத்திற்கும் தகப்பனாக, சினேகிதனாக இருந்து அதிசயங்களைச் செய்ய, உங்களுக்காக நம் ஜெபக் குழுவில் ஜெபிக்கிறோம்.

**தினமும் வாக்குத்தத்தத்தைச் சொல்லி ஜெபியுங்கள்**. இந்தப் புதிய வருடத்தில், இன்னும் அதிகமாக எழுப்புதலுக்காக ஜெபிக்க உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்.



இந்த வருடத்திற்குள், ஒரு ஆத்துமாவையாவது இரட்சிப்பிற்குள் வழி நடத்தத் தீர்மானியுங்கள். அதற்காக **ஜெபியுங்கள்.** ஆத்தும ஆதாயம் செய்ய ஆவியானவர் உங்களுக்கு உதவி செய்வார்.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட **மழை வெள்ளத்தால், சென்னை** மற்றும் **கடலூர் மாவட்டங்கள்** வெகுவாகப் **பாதிக்கப்பட்டு**, மக்கள் பெரும் அவதிக்குள்ளாயினர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு, கிறிஸ்துவின் அன்பினால் உந்தப்பட்டு, ஏராளமான உதவிகளைச் செய்து வருகிறோம். இந்த செய்திகளை அறிந்த இலங்கையிலுள்ள ஏராளமான தேவப் பிள்ளைகள், இந்த மக்களுக்காக ஜெபித்தீர்கள். உங்களுக்கு **நன்றி கூறுகிறேன்**.

வருகிற 2016 ஏப்ரல் மாதத்தில் இலங்கையில் நாம் செய்ய இருக்கிற ஊழியங்களுக்காக ஜெபித்து ஆயத்தப்படுங்கள். குறிப்பாக, '**காலி**'யில் வைத்து நடைபெறவிருக்கிற **3 நாட்கள் உபவாச ஜெபத்திற்காக** ஜெபிப்பது மட்டுமல்லாமல், தேசம் முழுவதிலும் இருந்து திரளாக வந்து **கலந்து கொள்ளுங்கள்.**

அது நம் தேசத்துக்கு ஆசீர்வாதத்தையும், நன்மையையும் கொண்டு வருகிறதாக இருக்கும்.

குறிப்பாக, தேசத் தலைவர்களுக்காகவும், தேசத்தின் பாதுகாப்பு மற்றும் ஆசீர்வாதங்களுக்காகவும் **அனுதினமும் ஜெபிக்க மறவாதீர்கள்.**

நம் '**இயேசு விடுவிக்கிறார்**' ஊழியங்களுக்காகவும் **ஜெபித்துக் கொள்ளுங்கள்.** இந்த வருடத்தில் ஜெபத்தையும், சுவிசேஷம் அறிவிப்பதையும் இன்னும் தீவிரப்படுத்தத் தீர்மானித்திருக்கிறோம். உங்கள் **ஜெபமும், உதவியும்** அதிகமாகத் **தேவை.**

மாதந்தோறும் தவறாமல் ஜெபத்தோடு உங்கள் பங்குகளை அனுப்பி வருகிற உங்களுக்காக, கர்த்தரைத் **துதிக்கிறேன்!** உங்களுக்காக **ஜெபிக்கிறேன்!**

**எனக்காக, என் மனைவிக்காக**, நம் 'இயேசு விடுவிக்கிறார்' குடும்பத்திற்காக **தினமும் ஜெபியுங்கள்.**

கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் சகோதரன்,

Mohan C L.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்த **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியத்திற்காக ஜெபிக்கிற, கொடுக்கிற, உதவி செய்கிற ஏராளமான தேவப் பிள்ளைகளைக் கர்த்தர் எழுப்பிக் கொடுத்திருக்கிறார். அவர்களுக்காக, இந்த 'இயேசு விடுவிக்கிறார்' பத்திரிக்கையை வாசிக்கிறவர்களுக்காக, அவர்களுடைய குடும்பங்களுக்காக நான் ஜெபிக்கிறதுண்டு.

ஒவ்வொரு வருடமும், நான் விசேஷமாக அவர்களுக்காக ஜெபிக்கும்போது, அவர்களுக்கென்று ஒரு வாக்குத்தத்தத்தைக் கர்த்தர் கொடுப்பார். அந்த வாக்குத்தத்தத்தை வைத்து நான் ஜெபிக்கும்போது, அந்த வாக்குத்தத்தத்திற்கான தேவ செய்தியைக் கொடுத்து, "இந்தப் பிரகாரமாக நான் அவர்களை ஆசீர்வதிப்பேன்." என்று கர்த்தர் வாக்குக் கொடுப்பார். அந்த வாக்குத்தத்தத்தின்படியே, கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கும்படியாக நான் ஜெபிப்பதுண்டு.

மட்டுமல்ல, ஒவ்வொரு வருடமும் கர்த்தர் கொடுக்கிற வாக்குத்தத்தச் செய்தியை, நம் பத்திரிக்கையின் மூலமாகவும் ஜனங்களுக்குத் தெரியப்படுத்துவதுண்டு. கடந்த 1980ம் வருடம்முதல், நான் இதைச் செய்து வருகிறேன்.

ஒவ்வொரு வருடமும், கர்த்தர், தான் வாக்குக் கொடுத்தபடியே, தம்முடைய பிள்ளைகளை ஆசீர்வதித்து வருகிறதை நான் பார்க்கிறேன்.

கர்த்தர் கொடுக்கிற அந்த வாக்குத்தத்தத்தை தேவப் பிள்ளைகள் நினைவு கூர்ந்து, ஜெபித்து, அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாக, அந்த வாக்குத்தத்தத்தை **'கார்டு'** (Card) மற்றும் **'ஸ்டிக்கர்'** (Sticker) போன்றவற்றில் அச்சடித்து, அவர்களுக்குக் கொடுக்கிறோம்.

அந்த வாக்குத்தத்தம் அச்சடிக்கப்பட்ட ஸ்டிக்கரை வாங்கி, எதிலாவது ஒட்டி வைத்துக் கொள்வதினாலோ, அல்லது அந்த வாக்குத்தத்தம் அச்சடித்த கார்டை தங்கள் சட்டைப் பையில் வைத்துக் கொள்வதினாலோ, ஆசீர்வாதம் வந்து விடாது. அதற்காக அவைகள் கொடுக்கப்படவில்லை. அந்த வாக்குத்தத்த வசனத்தைச் சொல்லி ஜெபிக்கும் போதுதான், அந்த ஆசீர்வாதம் உண்டாகும்!

கர்த்தர் கொடுக்கிற வாக்குத்தத்தத்தை தேவப் பிள்ளைகளுக்கு நினைவுபடுத்தவே, அதை ஸ்டிக்கராக, கார்டாக அச்சடித்துக் கொடுக்கிறோம்.

இந்த 2016ம் வருடத்திற்காக நான் தேவ சமூகத்தில் அமர்ந்து ஜெபித்தபோது, கர்த்தர் உங்களுக்கென்று கொடுத்த வாக்குத்தத்தம் இதுதான்:

**"நான் மோசேயோடே இருந்ததுபோல உன்னோடும் இருப்பேன்."** யோசுவா 1:5.

"நான் உன்னோடு இருப்பேன்." என்பதாக, கர்த்தர் சொல்லியிருக்கலாம்! ஆனால் அவர் அப்படிச் சொல்லாமல், **"நான் மோசேயோடே இருந்ததுபோல**, உன்னோடும் இருப்பேன்." என்று குறிப்பாகச் சொல்லியிருக்கிறார்.

பிரியமானவர்களே, **"இந்த வருடம் எப்படி இருக்குமோ?" என்று கலங்காதீர்கள்!**

இந்த வருடம் முழுவதும், **"நான் உன்னோடே கூட இருப்பேன்!"** என்று, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களுக்கு வாக்குக் கொடுக்கிறார். அவர் நம்மோடு கூட இருந்தால் போதும், எல்லாம் நன்மையாகவே நடக்கும்!

அவர் உங்களோடு கூட இருந்தால், நீங்கள் மலைகளையும் தாண்டலாம்! கடல்களையும் தாண்டலாம்! அக்கினிக்குள்ளும் கூட நீங்கள் நடக்கலாம்! பிறகு எதற்காக நீங்கள் பயப்பட வேண்டும்?

மலையைப் போல வரும் பிரச்சனைகளையும், கடல் அலையைப் போல வரும் போராட்டங்களையும், அக்கினியைப் போல வரும் சோதனைகளையும், மிகவும் சுலபமாக நீங்கள் தாண்டிச் செல்வீர்கள்.

இயேசு கிறிஸ்து கூட இருந்தால், அற்புதங்களைக் காணலாம்!

ஆம்! இந்த வருடத்தில் தினமும் உங்களுக்கு அற்புதங்கள் நடக்கும்! காரணம், இயேசு கிறிஸ்து அற்புதமானவர்! அவர் தினமும் அற்புதங்களைச் செய்து, ஜனங்களின் துக்கத்தை மாற்றுகிறவர்!

அவர் தினமும் உங்களோடிருப்பதே, உங்களுக்கு அற்புதங்களைச் செய்யத்தான். ஆகவே தினமும் நீங்கள் அற்புதங்களைக் காண்பீர்கள்!

**"நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்."** (யோசுவா 1:5) என்று கர்த்தர் சொன்னபடியினால், **'மோசேயோடே கர்த்தர் எப்படி இருந்தார்?'** என்பதைப் பற்றி நாம் அறிந்து கொள்வது நல்லது.

மோசேயோடே கர்த்தர் எப்படி இருந்தாரோ, அப்படியே அவர் உங்களோடும் இருப்பார்!

**தினந்தோறும் அவர் உங்களோடு கூட இருப்பார்! வருடம் முழுவதும், அவர் உங்களோடு கூட இருப்பார்! உங்கள் வாழ்நாள் முழுவதும், அவர் உங்களோடு கூட இருப்பார்!**

**இதுதான் உங்கள் சந்தோஷம்!**

**இதுதான் உங்கள் பெலன்!**


**இதுதான் உங்கள் ஆசீர்வாதம்!**

**மோசேயோடே இருந்ததுபோல, கர்த்தர் என்னோடே கூட எப்படி இருப்பார்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகப்பனைப்போல கூட இருப்பார்!



'மோசே' தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு மனிதர்! தேவ ஜனங்களாகிய இஸ்ரவேல் மக்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தபோது, இந்த மோசேயை கர்த்தர் அங்கு அனுப்பி, தன் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி, பாலும், தேனும் ஓடுகிற தேசமாகிய 'கானான்' என்கிற செழிப்பான தேசத்திற்குக் கொண்டு வந்தார்.

மோசே அந்த ஜனங்களை வழி நடத்தி, கானான் தேசத்திற்குச் சமீபமாக வந்தபோது,

**"ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிறவரைக்கும், நடந்துவந்த வழிகள் எல்லாவற்றிலும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டு வந்ததைக் கண்டீர்களே." (உபாகமம் 1:31)** என்றார்.

அதாவது, ஒரு தகப்பனைப் போல கர்த்தர் கூட இருந்து, அந்த ஜனங்களை வழி நடத்தியதை மோசே நினைவு கூர்ந்தார்.

ஒரு தகப்பனைப் போல, கர்த்தர் மோசேயோடே கூட இருந்தார். "அப்படியே உங்களோடும்கூட இருப்பேன்." என்று கர்த்தர் உங்களுக்கு வாக்குக் கொடுக்கிறார்.

**"தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்."** (சங்கீதம் 103:13) என்று பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டபடியே, கர்த்தர் உங்களுக்கு இரங்குகிற, இரக்கமுள்ள ஒரு தகப்பனாக இருக்கிறார். அவர் உங்கள் மீது மிகவும் அன்புள்ளவர்! ஒரு தகப்பன் தன் பிள்ளையை நேசிப்பதுபோல, உங்களை நேசிக்கிறவர்!

பாவம் செய்து, தன் தகப்பனை விட்டுப் பிரிந்து சென்ற இளைய மகன், தன் பாவத்தை உணர்ந்து திரும்பி வந்தபோது, "நீ ஒரு பாவி..." என்று சொல்லி அவனைத் தள்ளி விடாமல், தன் அன்பினால் அவனுடைய பாவங்களை மன்னித்து, அவனை அணைத்துக் கொண்ட தகப்பனைப்போல **(லூக்கா 15:20)**, கர்த்தர் உங்கள் பாவங்களை மன்னித்து, உங்களையும் தன்னோடு கூட அணைத்துக் கொள்வார்.

**"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்."** நீதி. 28:13.

ஒரு நல்ல தகப்பன், தன் பிள்ளைகளுக்கான நன்மைகளைத் தேடுகிறான்! அவர்களை நல்ல படிப்புப் படிக்க வைக்கப் பிரயாசப்படுகிறான்! நல்லதொரு வேலையில் அவர்களை இருக்க வைக்க முயற்சிக்கிறான்! அவர்கள் நல்ல தொழில் செய்ய உதவி செய்கிறான்! அவர்களுக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கிறான்!

அதேபோல, இயேசு கிறிஸ்துவும் நமக்கு நல்லதொரு தகப்பனாக இருக்கிறார்! நமக்கு நன்மையானவைகளை அருள்கிறார்.

**"...பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?"** மத்தேயு 7:11.

கர்த்தர், உங்களுக்கு நன்மையான பல ஆசீர்வாதங்களைத் தருகிறவர் மாத்திரமல்ல, உங்களைத் தூக்கிச் சுமக்கிற நல்ல தகப்பனாகவும் இருக்கிறார்.

எனக்கொரு சகோதரனைத் தெரியும். அவருடைய தகப்பனார் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய வழிகளில் நடக்கிறவர். பெரிய அளவில் வியாபாரம் செய்து கொண்டிருந்த அவர் திடீரென்று மரித்துப் போய் விட்டார். தன் தகப்பனாருடைய மரணத்தை எதிர்பார்த்திராத அந்த சகோதரன் கலங்கிப் போனார்.

"இனிமேல் இவ்வளவு பெரிய வியாபாரத்தை எப்படி நடத்துவது? சகோதரிக்குத் திருமணம் செய்ய வேண்டும்! என்ன செய்வது?" என்கிற எதிர்காலத்தைக் குறித்த பயம், அவருடைய உள்ளத்தில் உண்டாயிற்று. தன் தகப்பனை இழந்த சோகம் ஒரு பக்கம், "இனி என்ன செய்வது?" என்கிற பயம் ஒரு பக்கம். இதன் நிமித்தமாக அவர் மனம் சோர்ந்து போய், மிகுந்த துக்கத்தோடு கூட தன் வீட்டிற்குள்ளேயே படுத்திருந்தார்.

பல தேவ ஊழியர்கள் அவரை வந்து சந்தித்து, அவருக்காக ஜெபித்து, அவருக்கு ஆறுதல் சொன்னார்கள். என்றாலும், அவருடைய மனம் ஆறுதலடையவே இல்லை. தன் வீட்டிற்குள்ளேயே இருந்து, அழுது கொண்டே இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியாக தன் படுக்கையில் அவர் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் ஒருநாள், அவர் இருந்த அந்த அறைக்குள் இயேசு கிறிஸ்து பிரத்தியட்சமாகத் தோன்றினார்! இயேசு கிறிஸ்து அவரைப் பார்த்து: "நான் உனக்குத் தகப்பனாக இருப்பேன்!" என்று சொன்னார்.

அந்த வார்த்தையில், ஒரு நல்ல தகப்பனுடைய அன்பு இருந்தது! கனிவு இருந்தது! பாசம் இருந்தது!

இயேசு கிறிஸ்து சொன்ன அந்த ஒரே ஒரு வார்த்தை, அவரது துக்கம் நிறைந்த வாழ்க்கையை அப்படியே புரட்டிப் போட்டு விட்டது! அவருடைய உள்ளத்திலிருந்த வேதனை நீங்கி, அவருக்குள் இனம் புரியாத ஒரு பெரிய சந்தோஷம் உண்டாயிற்று! தன் எதிர்காலத்தைக் குறித்ததான பயம் நீங்கி, அவருக்குள் ஒரு நம்பிக்கை உண்டாயிற்று!

எழுந்து வியாபாரத்தைக் கவனிக்க ஆரம்பித்தார். ஒவ்வொரு காரியத்திற்கும் இயேசு கிறிஸ்துவிடம்தான் செல்வார். "நீர்தானே என் தகப்பன்! நீர்தான் எனக்கு இதைச் செய்ய வேண்டும்!" என்று உரிமையோடு சொல்வார். கர்த்தரும் அந்த சகோதரனுக்கு ஒரு நல்ல தகப்பனாக இருந்து, அவரை ஆசீர்வதித்து வழி நடத்தினார்.

ஒரு சமயம் அந்த சகோதரனை நான் சந்திக்க நேர்ந்தபோது, "என் தகப்பனார் உயிரோடு இருந்திருந்தால் கூட, இவ்வளவு சிறப்பாக நடந்திருக்க முடியாது! அவ்வளவு சிறப்பாக என் சகோதரியின் திருமணத்தைக் கர்த்தர் நடத்திக் கொடுத்தார்! வியாபாரத்தையும் அவ்வளவு ஆசீர்வாதமாக நடத்திக் கொண்டிருக்கிறார்!" என்று மகிழ்ச்சியோடு சொன்னார்.

இயேசு கிறிஸ்து உங்களுக்கும் நல்ல தகப்பனாக இருந்து, உங்களையும் ஆசீர்வதித்து நடத்துவார்.

ஒரு பிள்ளை, தன் தகப்பனோடு பேசுவதைப்போல தினமும் உங்கள் ஜெபத்தில் அவரோடு பேசுங்கள். உங்கள் காரியங்களை எல்லாம் அவருக்குத் தெரியப்படுத்துங்கள். கர்த்தர் உங்களுக்கு ஒரு நல்ல தகப்பனாக இருந்து, நன்மையானவைகளை உங்களுக்குத் தருவார்.

# சிநேகிதனாக, கூட இருப்பார்!



"ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய் பேசினார்." யாத். 33:11.

ஒரு பக்கம், நல்ல ஒரு தகப்பனாக மோசேயோடே கூட இருந்த கர்த்தர், இன்னொரு பக்கம், நல்ல ஒரு சிநேகிதனாக கூட இருந்தார்.

நெருங்கிய இரண்டு நண்பர்கள் உட்கார்ந்து பேசிக் கொள்வதைப்போல, கர்த்தரும், மோசேயும் பேசிக் கொள்வார்கள்! கர்த்தர், மோசேயினிடத்தில் சொன்ன காரியங்களை எல்லாம் மோசே செய்து முடித்தார். அதே சமயத்தில், மோசே கர்த்தரிடத்தில் பேசிச் சொன்ன காரியங்களை, கர்த்தரும் செய்தார். அவர்கள் இருவருக்குள்ளும் அவ்வளவு நெருக்கமான ஒரு ஐக்கியம் இருந்தது!

அதே போலத்தான், கர்த்தர் உங்களோடும் கூட இருக்க விரும்புகிறார். ஒரு சிநேகிதனைப்போல, உங்களோடு கூட ஐக்கியமாக இருக்க கர்த்தர் விரும்புகிறார்.

**"அவன் (ஆபிரகாம்) தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்."** (யாக்கோபு 2:23) என்று, ஆபிரகாமைக் குறித்து பரிசுத்த வேதாகமம் சாட்சி கொடுக்கிறது.

கர்த்தர், தன் இருதயத்திலிருந்த பாரத்தை ஆபிரகாமினிடத்தில் பகிர்ந்து கொண்டார். ஆபிரகாமும் கர்த்தருடைய இருதயத்திலிருந்த பாரத்தைப் புரிந்து கொண்டு, விண்ணப்பம் பண்ணினார். **(ஆதி. 18).** கர்த்தரும், ஆபிரகாமும், மிகவும் நெருக்கமான நண்பர்களைப் போல, ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டார்கள்!

**"கர்த்தர் ஆபிரகாமோடே பேசி முடிந்தபின்பு போய்விட்டார்; ஆபிரகாமும் தன்னுடைய இடத்துக்குத் திரும்பினான்." ஆதி. 18:33.**

**"தேவன் ஆபிரகாமோடே பேசி முடிந்தபின்பு, அவர் அவனைவிட்டு எழுந்தருளினார்." ஆதி. 17:22.**

பாருங்கள், பரலோகத்தின் தேவன் பூமிக்கு இறங்கி வந்து, ஆபிரகாமோடே பேசிக் கொண்டிருந்தார்! மிகவும் நெருக்கமான இரண்டு நண்பர்கள் சந்தித்துக் கொள்வதைப்போல, இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டார்கள். இருவரும் பேசி முடித்த பின்பு, தேவன் எழுந்தருளிப் போனார்.

எத்தனை அற்புதமான அனுபவம் பாருங்கள்! அப்படிப்பட்ட அற்புதமான அனுபவத்தை, கர்த்தர் உங்களுக்கும் கொடுக்க விரும்புகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தர் தன்னிடத்தில் சொன்னபடியே, மோசே ஒரு ஆசரிப்புக் கூடாரத்தை உருவாக்கினார். கர்த்தரைத் தேடுகிற யாவரும் அந்த ஆசரிப்புக் கூடாரத்திற்குப் போவார்கள். மோசே அந்த ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்போது, கர்த்தர் மேக ஸ்தம்பத்தில் இறங்கி வந்து, மோசேயோடு பேசுவார். **(யாத். 33:7,9).**

**"என் தாசனாகிய மோசேயோடே மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்."** (எண். 12:8) என்று, கர்த்தரே மோசேயைக் குறித்து சாட்சி கொடுக்கிறார்!


கர்த்தருடைய சாயலை மோசே கண்டார்! நெருங்கிய இரண்டு நண்பர்கள் பேசிக் கொள்வதைப்போல, மோசே முகமுகமாக கர்த்தரோடு பேசினார்! எத்தனை மகத்துவமான அனுபவம் பாருங்கள்!

மோசேயோடு ஒரு நண்பனைப் போலப் பழகிய கர்த்தர், இன்றைக்கு நம்மோடும் அப்படியே பழக விரும்புகிறார்.

ஒருவேளை, "நான் கர்த்தருக்கு நண்பனாக இருக்க முடியுமா?" என்று நீங்கள் நினைக்கலாம்!

நாம் அவரோடு ஒரு சினேகிதனாக இருக்க விரும்புவதை விட, அவர் நம்மோடு ஒரு சினேகிதனாகப் பழக அதிக விருப்பத்தோடு இருக்கிறார்.

## "உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள். நான் உங்களுக்குக் காணப்படுவேன்."



(எரேமியா 29:13,14) என்று கர்த்தர் வாக்குக் கொடுத்திருக்கிறார்.

நான் இரட்சிக்கப்பட்ட ஆரம்ப நாட்களில், சில தேவ ஊழியர்கள் சொல்கிற அனுபவங்களைக் கேட்டு, ஆச்சரியப்பட்டிருக்கிறேன். "பெரிய பெரிய தேவ ஊழியர்களோடுதான் கர்த்தர் பேசுவார்!" என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.

அந்த நாட்களில், அன்பு சகோதரர் D.G.S. **தினகரன்** அவர்களுடைய தேவ செய்திகளைக் கேட்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்கள் பிரசங்கிக்கிற இடங்களுக்கு அதிக வாஞ்சையோடு சென்றேன். பிரசங்க வேளையில், தான் இயேசு கிறிஸ்துவோடு வைத்திருக்கிற அனுபவங்களைச் சொல்லி விட்டு, **"நீங்களும் அந்த அனுபவத்தைப் பெறலாம்! உங்களோடும் இயேசு கிறிஸ்து பேசுவார்!"** என்று சொல்வார்கள்.

**"இயேசு கிறிஸ்து என்னோடும் பேசுவார்!"** என்பதை அவர்கள் மூலமாகத்தான் நான் கேட்டறிந்தேன். **"நீயும் கர்த்தரோடு நடக்கலாம்! உன்னோடும் அவர் நடப்பார்!"** என்று சகோதரர் அவர்கள் சொன்ன வார்த்தைகள், எனக்குள் பெரிய ஒரு மாற்றத்தை உண்டாக்கியது.

நானும் மிகுந்த தாகத்தோடு இயேசு கிறிஸ்துவைத் தேடினேன். அவர் என்னோடு பேசுவதை, கொஞ்சம் கொஞ்சமாக நான் உணர ஆரம்பித்தேன். நான் தேவ சமூகத்தில் காத்திருந்து, வேத வசனங்களை தியானித்து ஜெபிக்கும் போதெல்லாம், **பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு, கர்த்தர் என் ஆவியில் பேசுவதை உணர்ந்து கொண்டேன்.** கர்த்தரை நான் நெருங்க நெருங்க, ஆவியானவர் மூலமாக அவர் என்னோடு பேசுவதை என்னால் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிந்தது.

இப்படித்தான் கடந்த 1980ம் வருடம் டிசம்பர் 31ம் தேதி, வழக்கம்போல அதிகாலையில் நான் தேவ சமூகத்தில் அமர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது கர்த்தர், **"இன்று இரவு என் சமூகத்தில் நீ காத்திரு. புது வருடத்தில் நான் உன்னைச் சந்திக்க வருவேன்!"** என்று சொன்னார். எனக்குப் பெரிய சந்தோஷம். "இரவு எப்பொழுது வரும்?" என்று, நான் மிகுந்த ஆவலோடு காத்திருந்தேன்.

நம் 'இயேசு விடுவிக்கிறார்' வளாகத்தில், **'ஜெபக் கூடாரம்'** ஒன்று இருக்கிறது. அந்த நாட்களில், வழக்கமாக நான் அந்த ஜெபக் கூடாரத்திற்குள் சென்று ஜெபிப்பதுண்டு. அன்று இரவும் அந்த ஜெபக் கூடாரத்திற்குள் போய், தேவ சமூகத்தில் நான் காத்திருந்தேன்.

"இயேசு கிறிஸ்துவை நான் சந்திக்கப் போகிறேன்!" என்கிற மகிழ்ச்சி ஒரு பக்கம்! "அவரிடத்தில் என்ன கேட்கலாம்?" என்கிற குழப்பம் ஒரு பக்கம்! நேரம் நடு இரவை நெருங்கியபோது, நெடு முழங்காலில் நின்று நான் கர்த்தரைத் துதிக்க ஆரம்பித்தேன். பரிசுத்த ஆவியானவர் அந்த இடத்தை முழுவதுமாக நிரப்பினார். அப்பொழுது, ஆவியானவர் என் ஆவிக்குரிய கண்களைத் திறந்தார்.

தலை குனிந்து ஜெபித்துக் கொண்டிருந்த நான், **முதலாவது அவருடைய பிரகாசமான பாதங்களைப் பார்த்தேன்!** அவருடைய பாதங்களில் ஆணி அடிக்கப்பட்ட அந்தக் காயங்களைக் கண்டேன்! "இயேசு கிறிஸ்து என்னைச் சந்திக்க வந்து விட்டார்! என் அருகில் அவர் நிற்கிறார்!" என்பதை நான் அறிந்தபோது, அப்படியே மெய் சிலிர்த்துப் போனேன்!

கொஞ்சம் கொஞ்சமாக என் தலையை உயர்த்தி, அவருடைய முகத்தைப் பார்த்தேன். என் உள்ளம் அதிர்ச்சியடைந்தது! **அவருடைய முகம் மிகுந்த துக்கம் நிறைந்ததாக இருந்தது. அவருடைய அந்தப் பிரகாசமான கண்கள், புறாக்களின் கண்களைப் போல, கண்ணீரினால் நிரம்பி இருந்தது.**

"இயேசு கிறிஸ்துவைப் பார்த்து விட்டோம்!" என்கிற சந்தோஷம் மறைந்து,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர் ஏன் துக்கத்தோடு இருக்கிறார்?" என்கிற வேதனை என் உள்ளத்தில் உண்டாயிற்று.

அப்பொழுது அவர் என்னோடு பேச ஆரம்பித்தார்: "என் மகனே, உன் தேசத்திலிருக்கிற திரளான இந்த மக்களைப் பார்! பக்தியுள்ள மக்கள்! ஆனால், "உண்மையான தெய்வம் யார்?" என்று தெரியாமல், நான் உண்டாக்கிய மனிதர்களையும், மிருகங்களையும், பறவைகளையும் தெய்வங்களாக எண்ணி, அவைகளை வணங்குகிறார்கள்.

கற்பனையான தெய்வங்களையும், பேய்களையும் கூட தெய்வமாக நம்புகிறார்கள். பக்தியுள்ள இந்த மக்களை சாத்தான் வஞ்சித்து, நரகத்திற்கு அழைத்துச் செல்கிறான். இந்த மக்களுக்காக என் உள்ளம் துக்கம் கொண்டிருக்கிறது. நீ இந்த மக்களுக்காக, உன் ஜனத்திற்காக மன்றாடுவாயா?" என்றார் மிகுந்த சோகத்தோடு.

துக்கம் நிறைந்த அவருடைய அந்த வார்த்தைகள், என் உள்ளத்தை அசைத்தது. அவருடைய பாதத்தில் விழுந்து, **"என் ஜனத்தின் இரட்சிப்பிற்காக நான் ஜெபிக்கிறேன் ஆண்டவரே!"** என்று, கண்ணீர் விட்டு அழுது புலம்பி ஜெபித்தேன்.

அப்படியாக, சுமார் அரை மணி நேரம் ஆத்துமாக்களுக்காக அழுது ஜெபித்துக் கொண்டிருந்தேன். அவர் அங்கேயே நின்று கொண்டு, என் ஜெபத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அரை மணி நேரம் கழித்து, மறுபடியும் அவர் என்னோடு பேசினார்: **"உன் ஜனத்திற்காக என் பாதத்தில் நீ கண்ணீர் சிந்தி வேண்டுதல் செய்தபடியினால், நீ செல்கிற இடங்களிலெல்லாம் உனக்கு ஆத்துமாக்களைக் கொள்ளைப் பொருளாகத் தருவேன்."** என்று சொல்லி விட்டு, மறைந்து போனார்!

இயேசு கிறிஸ்து, தன் இருதயத்தின் பாரத்தை என்னோடு பகிர்ந்து கொள்ள என்னைச் சந்திக்க வந்தார். **அவர், தன் இருதயத்தின் பாரத்தைப் பகிர்ந்து கொள்ளவே என்னைத் தேடி வந்தார்** என்பதை நான் புரிந்து கொண்டேன். அன்றுமுதல், என் ஜெப வாழ்க்கை மாறியது. அவருடைய இருதயத்தின் பாரத்தை அறிந்து, நான் ஜெபிக்க ஆரம்பித்தேன்.

இப்படித்தான் அவர் எனக்கு ஒரு நல்ல சினேகிதனாக மாறினார். தேசங்களைக் குறித்து, மக்களைக் குறித்து, தன் இருதயத்தின் வேதனைகளை என்னிடத்தில் சொல்வார். "நீ இந்த தேசத்திற்குச் செல்வாயா? இந்த மக்களைப் போய் சந்திப்பாயா? இந்தப் பட்டணத்திற்குப் போவாயா? ஜெபிக்கிற மக்களை எழுப்புவாயா?" என்றெல்லாம் பேசுவார்.

**"நீர் சொல்வதை எல்லாம் நான் செய்வேன் ஆண்டவரே!"** என்று நான் சொல்லும் போதும், அதை நான் செய்து முடிக்கும் போதும் கர்த்தர் சந்தோஷப்படுவார்.

ஏதாவது பிரச்சனையின் நிமித்தமாக நான் துக்கப்பட்டு விட்டால், உடனே என்னை சந்திக்க வருவார். **"நீ ஏன் துக்கத்தோடு இருக்கிறாய்? உனக்கு நான் இருக்கிறேன்! நான் உனக்குப் போதும்!"** என்று எனக்கு ஆறுதல் சொல்வார். என்னை அவர் துக்கமாயிருக்க விட்டதே இல்லை.

**"நீ ஆத்துமாக்களுக்காக மட்டும்தான் அழ வேண்டும். உனக்காக நீ அழக் கூடாது. உனக்குத்தான் நான் இருக்கிறேனே!"** என்று மிகவும் அன்பாகப் பேசுவார்.

ஓ...இயேசு கிறிஸ்து எத்தனை அருமையான ஒரு சினேகிதர்! அவரைப் போல ஒரு நல்ல நண்பனை இந்த உலகத்தில் நீங்கள் பார்க்கவே முடியாது. அவருடைய பிரசன்னத்தில் நான் மகிழ்கிறேன்! களிகூருகிறேன்! ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறேன்!

இத்தனை அற்புதமான இயேசு கிறிஸ்துவை, நீங்களும் உங்கள் சினேகிதராக்கிக் கொள்வீர்களா?


மோசேயோடே கூட இருந்ததுபோல, ஒரு நல்ல சினேகிதனாக அவர் உங்களோடும் கூட இருக்க விரும்புகிறார்.

**"இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன்,** ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்." **(யோவான் 15:15)** என்று இயேசு கிறிஸ்து தன் சீஷர்களிடத்தில் சொன்னார்.

அதே இயேசு கிறிஸ்து, இன்றைக்கு உங்களைப் பார்த்துச் சொல்கிறார்: "நீ என் சினேகிதனாக இருக்க வேண்டும்." 'சினேகிதன்' என்றால், ஒருவருக்கொருவர் தங்கள் இருதயத்தின் பாரத்தைப் பகிர்ந்து கொள்வார்கள். அவர்களுக்குள் ஒளிவு மறைவே இருக்காது.

அப்படியாக, இயேசு கிறிஸ்துவை நம்முடைய சினேகிதராக நாம் ஏற்றுக் கொண்டால், அவர் தன் இருதயத்தைத் திறந்து நம்மோடு பேசுவார். அவர் துக்கப்படுவதையும், சந்தோஷப்படுவதையும் கூட உங்களால் உணர முடியும்.

நீங்கள் அவருடைய சினேகிதராக மாறுவீர்களா?



## "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்."

(யோவான் 15:14) என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார்.


அவர் என்ன சொன்னாலும், அதைச் செய்ய உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். நீங்கள் அவருக்குக் கீழ்படியக் கீழ்படிய, அவரும் உங்களை நெருங்கி வருவார்.

உங்களுக்கு விருப்பமானவைகளை மாத்திரம் அவரிடத்தில் கேட்டுக் கொண்டிருக்காமல், அவர் விரும்புகிறதையும் நீங்கள் செய்ய உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்களுக்கும் அவர் ஒரு நல்ல சினேகிதராக இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயங்களைச் செய்கிறவராக, கூட இருப்பார்!



"...பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செய்வேன்; உன்னோடேகூட இருக்கிற ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய செய்கையைக் காண்பார்கள்; உன்னோடேகூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும்." (யாத். 34:10) என்று மோசேக்கு கர்த்தர் வாக்குக் கொடுத்தார்.

அதன்படியே, மோசேயைக் கொண்டு அதிசயமான காரியங்களை கர்த்தர் செய்தார்.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தன் ஜனங்களை விடுதலையாக்கும்படியாக, கர்த்தர் பல அதிசயங்களைச் செய்தார். 10 விதமான அதிசயங்களைச் செய்து, தன்னுடைய ஜனங்களைக் குறித்த பயத்தை, எகிப்து தேசத்து மக்களுக்கு கர்த்தர் உண்டாக்கினார்.

கடலையே இரண்டாகப் பிளந்து, அதன் நடுவில் தன் ஜனங்களை அற்புதமாக வழி நடத்தினார்! வனாந்தரத்தில் தன் ஜனங்களுக்கு ஆகாரம் கொடுக்க, வானத்திலிருந்து 'மன்னா'வைத் தந்தருளினார்! தன் ஜனத்தின் தாகத்தைத் தீர்க்க, கன்மலையிலிருந்து தண்ணீரை ஆறாக ஓடப் பண்ணினார்! கசப்பான மாராவின் தண்ணீரை, மதுரமான தண்ணீராக மாற்றினார்!

பகலில் மேக ஸ்தம்பத்தினாலும், இரவில் அக்கினி ஸ்தம்பத்தினாலும் கர்த்தரே அவர்களுக்கு வழி காட்ட முன் சென்றார்! தன்னுடைய ஜனங்களோடு கூட யுத்தம் பண்ணுவதற்காக அனேக சத்துருக்கள் எழும்பி வந்தபோது, கர்த்தரே யுத்தம் பண்ணி, தன்னுடைய ஜனங்களுக்கு ஜெயத்தைக் கொடுத்தார்! இப்படியாக, எத்தனையோ அதிசயங்களை மோசேயைக் கொண்டு கர்த்தர் செய்தார்.

"நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டநாளில் நடந்ததுபோலவே உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்." (மீகா 7:15) என்று வாக்குக் கொடுத்திருக்கிறார்.

மோசேயோடே கூட இருந்து அதிசயங்களைச் செய்த கர்த்தர், உங்களுக்கும் அதிசயங்களைச் செய்வார்! உங்களைக் கொண்டும் அதிசயங்களைச் செய்வார்!

திருமணம் முடிந்து 15 வருடங்களாகியும், குழந்தை பாக்கியம் இல்லாமல் வேதனைபட்டுக் கொண்டிருந்த ஒரு தம்பதியினரைப் பரிசோதித்த டாக்டர்கள், "உங்களுக்குக் குழந்தை பிறக்க வாய்ப்பே இல்லை." என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். ஆனால் அவர்கள் தேவ சமூகத்தில் ஜெபிக்கும்படியாக வந்தார்கள். நான் அவர்களுக்காக ஜெபித்து, "கர்த்தர் உங்களுக்கு அதிசயம் செய்வார்!" என்று சொல்லி, அவர்களை அனுப்பி வைத்தேன். ஒரு வருடம் கழித்து, ஒரு குழந்தையுடன் என்னிடத்தில் ஜெபிக்கும்படியாக அவர்கள் வந்தபோது, "உங்களுக்கு எப்படிக் குழந்தை உண்டாயிற்று!" என்று டாக்டர்களே ஆச்சரியப்பட்டு, "இது ஒரு மருத்துவ அற்புதம்!" (Medical Miracle!) என்று சொன்னதாகச் சொன்னார்கள்.

இதுதான் அதிசயம்! இயற்கைக்கு மேற்பட்ட விதத்தில் நடக்கிற காரியம்தான் அதிசயம்! உங்களுக்கும் இயற்கைக்கு மேற்பட்ட அதிசயங்களைக் கர்த்தர் செய்வார்.

கடன் பிரச்சனையில் சிக்கித் தவித்த, சிறிய ஒரு வியாபாரம் செய்கிற ஒரு சகோதரனை எனக்குத் தெரியும். கடன்காரர்கள் அவரை மிகவும் நெருக்கியபடியினால், மிகவும் கலங்கிப் போனார். கடனைத் திருப்பிச் செலுத்தவும் அவருக்கு வழியில்லை. ஒருநாள், யார் யாருக்கெல்லாம் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியதிருந்ததோ, அவைகளை எல்லாம் ஒரு காகிதத்தில் எழுதினார். திறப்பின் வாசல் ஜெபத்தில் அவர் கலந்து கொண்டு, அந்தக் காகிதத்தை இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் வைத்து, "ஆண்டவரே, இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த எனக்கு வழியில்லை. நீர்தான் எனக்காக இந்தக் கடனையெல்லாம் திருப்பிச் செலுத்த வேண்டும்." என்று சொல்லி, மிகுந்த பாரத்தோடு ஜெபித்து விட்டுப் போனார்.

பாருங்கள், கர்த்தர் அவருடைய ஜெபத்தைக் கேட்டு, அடுத்த மாதத் திறப்பின் வாசல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெபத்திற்கு அவர் வருவதற்குள், அவருடைய அத்தனை கடனையும் அவர் திருப்பிச் செலுத்தும்படியாக, கர்த்தர் அவருக்கு அற்புதம் செய்தார்.

"ஒரு சின்னக் கடையை வைத்துக் கொண்டு, இவ்வளவு பெரிய கடனை எப்படிக் கொடுத்து முடித்தீர்கள்? அதுவும், ஒரு மாதத்திற்குள் உங்களால் எப்படி முடிந்தது?" என்று நான் அவரிடத்தில் கேட்டபோது, "அதுதான் எனக்கும் புரியவில்லை. ஆனால் எல்லாக் கடனையும் கொடுத்து முடித்து விட்டேன்!" என்றார்.

இதுதான் அதிசயம்! "எப்படி நடந்தது?" என்றே புரிந்து கொள்ள முடியாமல், இயற்கைக்கு மேற்பட்ட விதத்தில் நடப்பதுதான் அதிசயம்!

புற்று நோயினால் (Cancer) பாதிக்கப்பட்டிருந்த ஒரு சகோதரரை டாக்டர்கள் பரிசோதித்து விட்டு, "உங்கள் சரீரம் முழுவதும் புற்று நோய் பரவி விட்டது. இனி அதைச் சுகமாக்க வழியே இல்லை. எந்தச் சமயத்திலும் உங்களை மரணம் சந்திக்கலாம்!" என்று அவருடைய சரீரம் இருந்த நிலைமையை அறிந்து, அவரிடத்தில் சொல்லி விட்டார்கள்.

ஆனால் அவரோ, "இயேசு கிறிஸ்து எனக்கு ஒரு அதிசயம் செய்வார்!" என்று மிகுந்த விசுவாசத்தோடு அவரைத் தேடினார். இயேசு கிறிஸ்துவும் அவருடைய விசுவாசத்தைக் கனப்படுத்தி, அவரைத் தொட்டார். அதிசயம் நடந்தது! மறுபடியும் டாக்டர்கள் அவரைப் பரிசோதித்துப் பார்த்தபோது, அவருடைய சரீரத்தில் புற்று நோய் இருந்ததற்கான அறிகுறியே இல்லை! டாக்டர்களே குழம்பிப் போனார்கள்!

"என்ன நடந்தது? என்ன செய்தீர்கள்?" என்று அவரிடத்தில் கேட்டார்கள். அதற்கு அவர், "இயேசு கிறிஸ்துவிடம் சென்றேன்... ஜெபம் பண்ணினேன்... அவ்வளவுதான்!" என்றார். "உங்கள் இயேசு கிறிஸ்து உங்களை சுகமாக்கி விட்டார்! இது ஒரு அதிசயம்!" என்று மிகுந்த ஆச்சரியப்பட்டுச் சொல்லி, அவரை அனுப்பினார்கள்.

இயேசு கிறிஸ்து, உங்களுக்கும் அதிசயம் செய்வார்! காரணம், அவர் அதிசயமானவர்! **இயேசு கிறிஸ்து**வுக்குக் கொடுக்கப்பட்ட பெயர்களில் ஒன்று, **'அதிசயமானவர்!'** என்பது. **(ஏசாயா 9:6).**

ஒவ்வொரு நாளும் அவர் உங்களுக்கு அதிசயங்களைச் செய்வார். உங்களுடைய ஒவ்வொரு காரியத்திலும் அவர் அதிசயங்களைச் செய்வார். மோசேயோடே இருந்ததுபோல, உங்களோடும் கர்த்தர் கூட இருந்து அதிசயங்களைச் செய்வார்.

**விசுவாசியுங்கள்!** "இந்த வாக்குத்தத்தம் எனக்குரியது!" என்று **விசுவாசியுங்கள்.** உங்களுக்குக் கர்த்தர் அதிசயங்களைச் செய்வார்! உங்கள் மூலமாக மற்றவர்களுக்கும் கர்த்தர் அதிசயங்களைச் செய்வார்!

**மோசேயோடே இருந்ததுபோல, உங்களோடும் கர்த்தர் இருக்க வேண்டுமானால், நீங்கள் செய்ய வேண்டிய சில காரியங்கள் உண்டு.**

## 1. உண்மை உள்ளவர்களாக இருங்கள்!

கர்த்தர் மோசேயைக் குறித்துச் சாட்சியாக, **"என் தாசனாகிய மோசேயோ...என் வீட்டில் எங்கும்...உண்மையுள்ளவன்."** (எண். 12:7) என்று சொன்னார்.

மோசே, கர்த்தருடைய காரியத்தில் உண்மை உள்ளவராக இருந்தார். கர்த்தர் சொன்னதைச் செய்து முடிப்பதில் உண்மை உள்ளவராக இருந்தார். ஏமாற்றுவது, மாய் மாலம் பண்ணுவது போன்ற காரியங்கள் எதுவுமே மோசேயினிடத்தில் காணப்படவில்லை. ஆகவேதான் கர்த்தர் மோசேயோடே கூட இருந்தார்.



நீங்களும் உண்மை உள்ளவர்களாக இருக்க, உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். நீங்கள் வேலை செய்கிறவர்களாக இருந்தால், உங்கள் வேலையில் உண்மை உள்ளவர்களாக இருங்கள்! நீங்கள் தொழில் செய்கிறவர்களாக இருந்தால், உங்கள் தொழிலில் உண்மை உள்ளவர்களாக இருங்கள்! நீங்கள் ஊழியம் செய்கிறவர்களாக இருந்தால், ஊழியத்தில் உண்மை உள்ளவர்களாக இருங்கள்!

காரணம், **உண்மை உள்ளவர்களோடுதான் கர்த்தர் இருக்க முடியும்!**

**மனைவிமார்களே, உங்கள் கணவனுக்கு உண்மையாயிருங்கள்!**

**கணவன்மார்களே, உங்கள் மனைவிக்கு உண்மையாயிருங்கள்!**

**பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு உண்மையாயிருங்கள்!**

**வேலைக்காரரே, உங்கள் எஜமானுக்கு உண்மையாயிருங்கள்!**

**எஜமான்களே, உங்கள் வேலைக்காரருக்கு உண்மையாயிருங்கள்!**

**தேவ ஊழியர்களே, உங்களை அழைத்த கர்த்தருக்கு உண்மையாயிருங்கள்!**

**அரசியல்வாதிகளே, உங்களை நம்பி ஓட்டுப் போட்ட மக்களுக்கு உண்மையாயிருங்கள்!**

**அதிகாரிகளே, உங்கள் கடமைகளைச் செய்வதில் உண்மையாயிருங்கள்!**

**"உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்;" (நீதி. 28:20).**


மோசேயோடே கூட கர்த்தர் இருந்ததைப்போல, உங்களோடும் அவர் இருக்க வேண்டுமானால், மோசேயைப்போல உண்மை உள்ளவர்களாக வாழ, உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. பரிசுத்த வேதாகமத்தில் தியானமாயிருங்கள்!

**"நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்;"** (யோசுவா 1:5) என்று யோசுவாவுக்கு வாக்குக் கொடுத்த கர்த்தர்:



**"இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் (தேவனுடைய வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமம்) உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய்..."** (யோசுவா 1:8) என்கிற கட்டளையையும் கொடுத்தார்.

ஏனென்றால், கட்டளைக்குக் கீழ்படியும் போதுதான், கர்த்தர்கூட இருந்து அதிசயங்களைச் செய்வார்.

ஆகவே, **தினமும் வேதாகமத்தை வாசித்து தியானியுங்கள்! வேத வசனத்தின்படி நடக்க உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்!** அப்பொழுது, கர்த்தர் மோசேயோடு கூட இருந்ததைப்போல, உங்களோடும் இருப்பார்.

உண்மை உள்ளவர்களாக இருக்கவும், பரிசுத்த வேதாகமத்தில் தியானமாக இருக்கவும், இப்பொழுது உங்களை அர்ப்பணிக்கிறீர்களா? அப்படியாக நீங்கள் அர்ப்பணித்தால், இந்த வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்களை, நிச்சயமாகவே நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்.

தினமும் கர்த்தர் உங்களுக்கு அதிசயங்களைச் செய்வார்! இன்றைக்குச் செய்வார்! இப்பொழுதே செய்வார்! **விசுவாசியுங்கள்!**

அப்படியானால் என்னோடு சேர்ந்து இந்த ஜெபத்தை ஏறெடுங்கள்:



**வாக்குத்தத்தங்களின் தேவனே, வாக்கு மாறாதவரே, உமக்கு ஸ்தோத்திரம்! நீர் எனக்குக் கொடுத்த இந்தப் புத்தாண்டு வாக்குத்தத்தத்திற்காக, உமக்கு ஸ்தோத்திரம்! மோசேயோடே கூட இருந்ததுபோல, என்னோடும் நீர் கூட இருக்கிறதற்காக, உமக்கு ஸ்தோத்திரம்! மோசேயைப்போல எல்லாக் காரியத்திலும் நான் உண்மையாக இருக்க, என்னை அர்ப்பணிக்கிறேன்! உம்முடைய வேத வசனங்களை தினமும் வாசித்து தியானிக்கவும், அதன்படி நடக்கவும் என்னை அர்ப்பணிக்கிறேன்! எனக்கொரு தகப்பனாக, என்னோடு நீர் கூட இருந்து, என்னை வழி நடத்தும்! மோசேயோடு கூட ஒரு நல்ல நண்பனாக இருந்து பழகினீரே! அதேபோல, நல்ல ஒரு நண்பனாக எனக்கும் நீர் வேண்டும்! உம்முடைய இருதயத்தின் வேதனைகளை நீர் என்னிடத்தில் சொல்லும். நான் உம்மோடு இணைந்து ஜெபிக்க ஆயத்தமாக இருக்கிறேன்! இனிமேல், நீர் விரும்புகிற காரியத்திற்காக நான் ஜெபிப்பேன்! என் வாழ்க்கையில், உம்முடைய அதிசயங்களைக் காண விரும்புகிறேன்! இன்றைக்கு என்னைத் தொடும்! எனக்கு ஒரு அதிசயத்தைச் செய்யும்! என் குடும்பத்தில் உம்முடைய அதிசயம் விளங்கட்டும்! என் வேலையில்... என் வியாபாரத்தில்... என் குடும்பத்தில்... என் தொழிலில்... என் படிப்பில்... என் ஊழியத்தில் எனக்கொரு அதிசயத்தைச் செய்யும்! இயற்கைக்கும் மேற்பட்ட அதிசயத்தை நான் உம்மிடத்தில் எதிர்பார்க்கிறேன்! ஒவ்வொரு நாளும்... இந்த வருடம் முழுவதும்... என் வாழ்நாள் முழுவதும் அதிசயங்கள் நடப்பதாக! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்... ஆமென்! ஆமென்!**


நமது சகோதரர் மோகன். சி. லாசரஸ் அவர்கள் அளித்த,

2016ம் வருடத்திற்கான புத்தாண்டு

வாக்குத்தத்தச் செய்தி!




DVDயில்!

நேரில் பெற ₹ 100/-

தபாலில் பெற ₹ 150/-

வத்தளை மற்றும் கிளிநொச்சி கிளை அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்!

Online Purchase: www.jesusredeemsonline.com www.jesusredeems.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## நிறைவேறிக் கொண்டிருக்கும் தேவத் திட்டம்!

# தேவனுடைய கூடாரம்!

தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிகள் இறுதிக் கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. கர்த்தருடைய பெரிதான கிருபையினால், தற்போது **தரை போடுகிற பணிகள்** நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதைத் தொடர்ந்து, **முன் பகுதியில் செய்யப்பட இருக்கிற** மற்றும் **ஜெபக் கோபுரம் அமைக்கப்பட இருக்கிற பணிகள்** சீக்கிரமாக செய்து முடிக்கப்பட வேண்டும். இதற்காக அதிகமாக **ஜெபியுங்கள்.**

இந்தக் கட்டுமானப் பணிக்காகக் கொடுத்துத் தாங்குகிற தேவப் பிள்ளைகளை, கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறார்.

## அதிசயங்களைச் செய்தார்!



நாங்கள் சுமார் **10 வருடங்களுக்கும்** மேலாக, **வாடகைக் கடையில்** வியாபாரம் செய்து வந்தோம். “சொந்தமாக ஒரு கடை கட்ட வேண்டும்.” என்று விரும்பி, அருகாமையில் காலியாக இருந்த ஒரு நிலத்தைக் கேட்டோம். அதிகமான விலை சொன்னதால், அதை எங்களால் வாங்க முடியவில்லை.

இந்நிலையில், மாதந்தோறும் எங்கள் வீட்டிற்கு வருகிற, ‘**இயேசு விடுவிக்கிறார்**’ பத்திரிக்கையை வாசித்தபோது, “தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிக்கென்று, ₹ 1,000/- காணிக்கை அனுப்ப வேண்டும்.” என்று நான் கர்த்தரால் ஏவப்பட்டு, உடனே அனுப்பி வைத்தேன்.

என்ன **ஆச்சரியம்!** எங்கள் கையில் ₹ 1 லட்சம் கூட இல்லாத நிலையில், ₹ **13 லட்சம்** கொடுத்து, அருகிலிருந்த அந்த நிலத்தையே நாங்கள் **சொந்தமாக** வாங்கவும், அடுத்த **3** வருடத்திற்குள்ளாக, ₹ **15 லட்சம்** செலவில், **இரண்டடுக்கு மாடி கொண்ட ஒரு பெரிய கடையைக் கட்டி முடிக்கவும்**, கர்த்தர் மாபெரும் கிருபை செய்தார்.

மட்டுமல்ல, நான் Nursing படித்து முடித்து **15 வருடங்களாகியும்**, எனக்கு **வேலை கிடைக்காமல் இருந்தது**. இந்நிலையில், என் மன விருப்பத்தின்படியே எனக்கு **அரசு மருத்துவமனையில் Nurse ஆக வேலை கிடைக்கவும்**, கர்த்தர் எனக்கு உதவி செய்து, எங்களை ஆசீர்வதித்தார்.

– X. **அனிதா**, நல்லம்பள்ளி.

**இந்த தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிக்காகக் காணிக்கை அனுப்ப நீங்கள் கர்த்தரால் ஏவப்பட்டால், இங்கே கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

– உங்கள் சகோதரன்.

### காணிக்கை அனுப்ப...

| | |
|---|---|
| A/c Name: | Jesus Redeems Ministries |
| Bank Name: | Commercial Bank, Colombo - 7. |
| A/c No: | 15000 23 755 |
| Swift Code: | CCEYLKLX |

**Contact: 57/36A, Thimbirigasyaya Road, Hendala, P.O. 108, Wattala, SRILANKA. *(Ph: 011 293 0152)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015ம் வருடத்தில்,

## 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியங்களில்

# மகிமைப்பட்ட இயேசு கிறிஸ்து!

கடந்த 2015ம் வருடத்திற்கு, **"நான் உன்னில் மகிமைப்படுவேன்."** (ஏசாயா 49:3) என்று வாக்குப் பண்ணிய கர்த்தராகிய **இயேசு கிறிஸ்து**, வருடம் முழுவதும் நடைபெற்ற எல்லா ஊழியங்களிலும் பெரிய காரியங்களைச் செய்து மகிமைப்பட்டார்! நடைபெற்ற ஒவ்வொரு ஊழியத்திலும் அவர் செய்த மகத்துவமான காரியங்களை எல்லாம், இந்த ஊழியத்தை ஜெபத்தினாலும், பொருளினாலும் தாங்கி வருகிற, தேவப் பிள்ளைகளாகிய உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிகவும் சந்தோஷப்படுகிறேன். கர்த்தர் செய்த மகிமையான காரியங்களை வாசித்து, அவரைத் **துதியுங்கள்!**

## விடுதலைப் பெருவிழா!

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள **வீரவநல்லூர், கருத்தப் பிள்ளையூர், திருவேங்கடம்** மற்றும் கர்நாடகா மாநிலம்-**அகரே** ஆகிய கிராமப் பகுதிகளிலும், **நாகர்கோவில், சென்னை** உள்ளிட்ட பெரிய பட்டணங்களிலும் நடத்தப்பட்ட **விடுதலைப் பெருவிழாக்களின்** மூலமாக, சுமார் **1,88,500**க்கும் அதிகமான மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, சுமார் **19,695** பேர் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டார்கள்.



வீரவநல்லூர்

## 12 மணி நேர-திறப்பின் வாசல் உபவாச ஜெபங்கள்!

**கோவை, மைசூர், பெங்களூரு** ஆகிய இடங்களில், **12 மணி நேர-திறப்பின் வாசல் உபவாச ஜெபமும், சென்னையில்** (2015 ஜனவரி 26) **திறப்பின்** வாசல் ஜெப மாநாடும் நடத்தப்பட்டது. மேலும், **விஜயவாடா** (ஆந்திரா), **ஹாசன்** (கர்நாடகா) ஆகிய இடங்களிலும், **வவுனியா** (இலங்கை), **லண்டன்** ஆகிய வெளி தேசங்களிலும் **உபவாச ஜெபங்களை** நடத்தி, எழுப்புதல் திட்டத்தில் பங்காற்ற கர்த்தர் கிருபை செய்தார்.

மட்டுமல்ல, **சிங்கப்பூர்** தேசத்திலும், மலேசியாவிலுள்ள **ஜோகூர், கோலாலம்பூர், பினாங்கு** போன்ற பட்டணங்களிலும், **துபாயிலும் 12 மணி நேர உபவாச ஜெபங்களை** நடத்தவும், **ஓமான்** தேசத்திலுள்ள **மஸ்கட், சலாலா** ஆகிய இடங்களிலும், **அமெரிக்கா, கனடா** ஆகிய தேசங்களிலும் **திறப்பின் வாசல் ஜெபங்களை** நடத்தவும் கர்த்தர் கிருபை செய்தார். நடைபெற்ற இந்த எல்லா ஜெபங்களிலும் சுமார் **2,50,000**க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டு, தேசத்திற்காக ஜெபித்தார்கள்.

## மேய்ப்பர்கள் எழுப்புதல் ஜெபக் கருத்தரங்கு!

கர்த்தருடைய திட்டத்தின்படியே, **தமிழ்நாட்டிலுள்ள 23 மாவட்டங்கள், பெங்களூரு, பாண்டிச்சேரி** மற்றும் **கிளிநொச்சி** (இலங்கை) ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட **மேய்ப்பர்கள் எழுப்புதல் ஜெபக் கருத்தரங்குகள்** மூலமாக, சுமார் **7,200** திருச்சபை மேய்ப்பர்களைச் சந்தித்து, அவர்களுக்குள் எழுப்புதல் தரிசனத்தை உண்டாக்கக் கர்த்தர் கிருபை பாராட்டினார்.

## இலங்கை ஊழியங்கள்!

ஒவ்வொரு மாதமும் **இலங்கை** தேசத்தில் **திறப்பின் வாசல் ஜெபத்தை** நடத்த கர்த்தர் வழி திறந்தார்! **வவுனியாவில்** 3 நாட்கள் **உபவாச ஜெபமும், கொழும்புப்** பட்டணத்தில் **வியாபாரிகள்** மற்றும் **தேசத்தின்** ஆசீர்வாதங்களுக்கான **ஜெபமும், கிளிநொச்சியில்** மேய்ப்பர்களுக்கான **எழுப்புதல் ஜெபக் கருத்தரங்கும்** நடத்தப்பட்டது. கடந்த வருடத்தில் இலங்கைக்கான **தமிழ்** மற்றும் **சிங்களப் பத்திரிக்கைகளை** அங்கேயே அச்சிட்டு வெளியிட, கர்த்தர் கிருபை செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள் புது வாழ்வு முகாம்!



புளியங்குடி

கடந்த வருடத்தில், **தூத்துக்குடி, புளியங்குடி, மாவடி, கருங்கல்** மற்றும் **பாண்டிச்சேரி** போன்ற இடங்களில் நடத்தப்பட்ட **பெண்கள் புது வாழ்வு முகாம், கிணத்துக்கடவில்** நடத்தப்பட்ட **பெண்கள் ஆசீர்வாத முகாம், ஏழாயிரம் பண்ணையில்** நடத்தப்பட்ட **பெண்கள் எழுப்புதல் ஜெப முகாம், வள்ளியூரில்** நடத்தப்பட்ட **குடும்ப ஆசீர்வாத முகாம், வேலூரில்** நடைபெற்ற **அன்னையர் பிரார்த்தனை** மற்றும் **சிங்கப்பூரில்** நடைபெற்ற **பெண்கள் சிறப்புக் கூடுகை** போன்ற ஊழியங்களில், நமது சகோதரி **ஜாய்ஸ் லாசரஸ்** அவர்களை, கர்த்தர் வல்லமையாகப் பயன்படுத்தி, பெண்கள் மத்தியில் பெரிய எழுப்புதலைக் கட்டளையிட்டார். உடைந்து போயிருந்த அனேகக் குடும்பங்கள், இந்த ஊழியங்கள் மூலமாகக் கட்டப்பட்டு, கர்த்தருக்கு சாட்சிகளாக இருக்கின்றன. ஆயிரக்கணக்கான பெண்கள், தங்களை ஜெபிக்கிறவர்களாக அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

## மிஷனெரி ஊழியம்!

**புதிதாக 25 மிஷனெரிகளைப்** பொறுப்பேற்று, மொத்தம் 50 ஸ்தாபனங்கள் மூலமாக அவர்களைத் தாங்கவும், **17 ஆலயங்களைக்** கட்டிக் கொடுக்கவும், **61 குழந்தைகளைப்** பொறுப்பேற்றுத் தாங்கவும் கர்த்தர் கிருபை செய்தார். **'ஷாலோம்'** மிஷனெரி ஊழிய ஸ்தாபனத்தின் மூலமாக, 10 லட்சம் ஆத்துமாக்களை இலக்காக வைத்து செயல்படுகிற ஊழியத்திற்கு, ₹10 லட்சம் செலவில் 2 Tata Magic வாகனங்களை வாங்கிக் கொடுத்துள்ளோம். மேலும், 'ஷாலோம்' மிஷனெரிகளுக்கான **குடும்ப முகாம்** நடத்தி, அவர்களை உற்சாகப்படுத்தி உள்ளோம். இந்த மிஷனெரி ஊழியத்தின் மூலமாக, சுமார் **67,700** ஆத்துமாக்கள் **இரட்சிக்கப்பட்டு,** சுமார் **700** பேர் **ஞானஸ்நானம்** பெற்று, திருச்சபைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



'ஷாலோம்' மிஷனெரி ஊழியத்திற்கு வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ள 2 Tata Magic வாகனங்கள்.

## கெத்சமெனே ஜெப மையங்கள்!

தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபிக்க, தேசமெங்கிலும் **கெத்செமனே ஜெப மையங்கள்** ஏற்படுத்தப்பட்டு வருகிறது. **உலகெங்கிலும்,** இதுவரை **55 ஜெப மையங்கள்** இயங்கி வருகிறது. கடந்த வருடத்தில், இங்கு வந்து ஜெபிக்க வந்தவர்கள் மற்றும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களின் விபரங்கள்:

- தேசத்திற்காக **ஜெபிக்க வந்தவர்கள் - 60, 448** பேர்.
- **நேரில்** வந்து **ஆலோசனை பெற்றவர்கள் - 41,446** பேர்.
- **தொலைபேசி** மூலமாக **ஆலோசனை பெற்றவர்கள் - 37,765** பேர்.
- புதிதாக **இரட்சிக்கப்பட்டவர்கள் - 853** பேர்.

மேலும், **புரசைவாக்கம், ஆதம்பாக்கம், மதுரை, கடலூர், வேளாங்கண்ணி, சண்டிகர்** மற்றும் **ஹாசன்** (கர்நாடகா) ஆகிய இடங்களிலும் **புதிய கெத்சமெனே ஜெப மையங்கள்** துவங்கப்படவும், கர்த்தர் கிருபை செய்தார்.

## தேவனுடைய கூடாரம்!

**தேவனுடைய கூடாரத்தில்,** பொங்கல் விடுமுறை நாட்களில் நடைபெற்ற **திறப்பின் வாசல் உபவாச ஜெப முகாமில்,** சுமார் **10,000**க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு, தேசத்திற்காக ஜெபித்தார்கள். மார்ச் 14ம் தேதி நடைபெற்ற வியாபாரிகள் மற்றும் தொழில் செய்வோருக்காக நடைபெற்ற **ஆசீர்வாத உபவாச ஜெபத்தில்,** சுமார் **30,000**க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

மேலும், மே மாதம் நடைபெற்ற **இயேசுவின் போர்ச் சேவகர் முகாமில், 2,422** பேர்கள் கலந்து கொண்டு, பயிற்சி பெற்றார்கள். அதே மாதத்தில் நடைபெற்ற **விடுதலை முகாமிலும்** சுமார் **10,000**க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு, தங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் விடுதலையைப் பெற்றுக் கொண்டார்கள்.

**வியாழக்கிழமைதோறும்** நடைபெற்ற **'அற்புத விடுதலைப் பிரார்த்தனை'**யில் சுமார் 2,000 முதல், 5,000 பேர்கள் வரை கலந்து கொண்டு, ஆசீர்வதிக்கப்பட்டார்கள். **மாதத்தோறும்** நடைபெற்ற **முழு இரவு ஜெபத்தில்,** சுமார் **500**க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு, தேசத்திற்காக ஜெபித்தார்கள்.

சுமார் **1,500** பேர்களைக் கொண்ட **மூத்த குடிமக்கள் கூடுகையையும்,** சுமார் **500** பேர்களைக் கொண்ட **மாற்றுத் திறனாளிகள் கூடுகையையும்,** தினந்தோறும் நடைபெற்ற **ஜாமக்காரன்** ஜெபத்தையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். **தினந்தோறும்** சுமார் **50**க்கும் அதிகமானோர் இங்குள்ள **வரவேற்பறைக்கு** வந்து ஆலோசனைகளைப் பெற்று, ஜெபித்துச் சென்றார்கள்.

நமது ஊழியத்தின் புதியதோர் மைல் கல்லாக, கர்த்தருடைய திட்டத்தின்படியே, **'அறுவடை வேதாகமக் கல்லூரி'** (Harvest Bible College) ஒன்று ஆரம்பிக்க, கர்த்தர் கிருபை பாராட்டினார்.

நடைபெற்ற **கட்டுமானப் பணிகள்** அனைத்தையு,ம் கர்த்தர் **தடையில்லாமல்** நடத்திக் கொடுத்தார். கடந்த ஆண்டு முழுவதும் இங்கு நடைபெற்ற அனைத்து ஊழியங்கள் மூலமாக, கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெப மலை ஊழியங்கள்!

ஜெப மலையில் நடைபெற்ற **'ஜாமக்காரன்'** ஜெபத்திற்கு, சுமார் **6,171** பேர்கள் நேரடியாக வந்து தேசத்திற்காக ஜெபித்தார்கள். சுமார் **1,532** பேர்கள், ஜெபத்திற்காக **தொலைபேசி** மூலமாகத் தொடர்பு கொண்டார்கள். சுமார் **13,679** பேர்கள் நேரடியாக வந்து ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

**ஜெப நடைத் தோட்டம்** பிரதிஷ்டை செய்யப்பட்ட (2012 ஆகஸ்ட் 23) நாள்முதல், இதுவரை சுமார் **15,998** பேர்கள் நேரடியாக வந்து **16,410 மணி நேரம்** ஜெபித்திருக்கிறார்கள்.

கடந்த 2014 ஆகஸ்ட் 28ம் தேதி பிரதிஷ்டை செய்யப்பட்ட **மன்றாட்டு ஜெபக் கோபுரத்திற்கு**, இதுவரை சுமார் **3,889** பேர்கள் நேரடியாக வந்து, **5,757:40 மணி நேரம்** ஜெபித்திருக்கிறார்கள். சுமார் **4,469** பேர் **அற்புத சுகம் ஜெபக் கோபுரத்திற்கு** வந்து ஜெபித்து, வியாதியிலிருந்து சுகத்தைப் பெற்றுச் சென்றிருக்கிறார்கள். **ஒரு கோடி ஆத்துமாக்களுக்காக 32,142 மணி நேரம்** ஜெபம் ஏறெடுக்கப்பட்டுள்ளது.

நடைபெற்ற **வியாழக்கிழமை உபவாச ஜெபத்தில்** கலந்து கொண்டு ஜெபித்தவர்கள், சுமார் **2,840** பேர். **திறப்பின் வாசல் ஜெபத்தில்** கலந்து கொண்டு ஜெபித்தவர்கள், சுமார் **47,500** பேர். **முழு இரவு ஜெபத்தில்** கலந்து கொண்டு ஜெபித்தவர்கள் **2,772** பேர். **தன்னார்வ ஊழியர் கூடுகையில்** கலந்து கொண்டு ஜெபித்தவர்கள் **478** பேர். **மகளிர் சுய உதவிக் குழு கூடுகையில்** கலந்து கொண்டு ஜெபித்தவர்கள் **1,737** பேர். இங்கு **தங்கியிருந்து** ஜெபித்தவர்கள் **801** பேர்.

**'சினெர்ஜியா'** வாலிபர் **கூடுகையில் 717** வாலிபர்கள் கலந்து கொண்டு ஜெபித்தனர். சிறு பிள்ளைகளுக்கான JR Kids fellowship **கூடுகையில் 836 சிறு பிள்ளைகள்** கலந்து கொண்டு ஜெபித்தனர். நடைபெற்ற கிராம ஊழியத்தின் மூலமாக சுமார் **4,700** பேர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. அதன் மூலமாக **403** பேர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள்.

## தொலைக்காட்சி ஊழியம்!

கடந்த வருடத்தில், நமது தொலைக்காட்சி ஊழியத்தின் நிகழ்ச்சிகள் அனைத்தும், 11 தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள் வாயிலாக, **5 மொழிகளில் (தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி)** இரவும், பகலுமாக, ஒரு மாதத்திற்கு **248 தொலைக்காட்சி நிகழ்ச்சி**கள் ஒளிபரப்பப்பட்டு, உலகமெங்கும் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் கிருபை செய்தார்.

www.jesusredeems.tv என்ற இணைய தளத்தின் மூலமாக **24 மணி நேரமும்** ஒளிபரப்பப்பட்ட WebTV மூலமாக, சுமார் **150 நாடுகளில்** உள்ள **மக்கள் பயனடைந்தார்கள்.**

நமது இணைய தளத்தின் மூலமாக, **தினந்தோறும்** குறைந்தது **1,000** பேர்கள் நமது நிகழ்ச்சிகளைக் கண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். **Youtube**ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள நமது நிகழ்ச்சிகளின் மூலமாகவும் லட்சக்கணக்கான மக்கள் பயனடைந்தனர்.

**'உங்கள் அற்புதத்தின் நேரம்!'**, **'உங்கள் ஆசீர்வாத நேரம்!'**, **'குடும்ப ஆசீர்வாத நேரம்!'**, சிறு பிள்ளைகளுக்கான **'ஜாலி டைம்!'**, வாலிபர்களுக்கான **'வாலிபர் உலகம்!'**, உங்கெங்கும் நடைபெறுகிற கிறிஸ்தவ நிகழ்வுகளை வெளிப்படுத்துகிற **'உலகக் கிறிஸ்தவச் செய்திகள்!'**, பெண்களுக்கான **'பெண்கள் புது வாழ்வு நேரம்!'**, 'I Love My Bible!' (Quiz) போன்ற வித்தியாசமான பல நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒளிபரப்பவும் கர்த்தர் உதவி செய்தார்.

இந்த ஊழியத்தின் மூலமாக, **தினந்தோறும்** சுமார் **10 லட்சம் மக்களுக்கு சுவிசேஷம்** அறிவிக்கப்பட்டு வருகிறது. **'ஜெ'** என்கிற ஒரு **சுவிசேஷத் திரைப்படம்** தயாரிக்கவும் கர்த்தர் கிருபை செய்தார். இது, வெகு சீக்கிரத்தில் வெளிவர இருக்கிறது. கடந்த வருடம் முழுவதும் இந்த ஊழியத்திற்கான சகல தேவைகளையும், கர்த்தர் மிக அற்புதமாக சந்தித்துக் கொடுத்தார்.

## சிறுவர் ஊழியம்!

சிறுவர் ஊழியத்தை கர்த்தர் விரிவடையச் செய்து, **436 இடங்களில்** நடத்தப்பட்ட சிறுவர் ஊழியத்தின் மூலமாக, சுமார் **1,30,000**க்கும் அதிகமான சிறு பிள்ளைகள் பயனடைந்தார்கள். சுமார் **26,640** சிறு பிள்ளைகள் இயேசு கிறிஸ்துவுக்கு தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். **2,677** பேருக்கு சிறுவர் ஊழியம் செய்வதற்கான பயிற்சி கொடுக்கப்பட்டது.

மேலும், **மதுரை, காஞ்சிபுரம், தூத்துக்குடி** ஆகிய பகுதிகளில், புதிதாக JR Kids Fellowship கூடுகை ஆரம்பிக்கப்பட கர்த்தர் கிருபை செய்தார். விசேஷமாக, கடந்த 2015 ஆகஸ்ட் 5ம் தேதி, சுமார் **3,000**க்கும் அதிகமான **சிறு பிள்ளைகள்** நாலுமாவடி-தேவனுடைய கூடாரத்தில் ஒன்று கூடி, **தேசத்திற்காக ஒருநாள் உபவாசித்து** ஜெபித்தார்கள். புதிதாக **119 சிறுவர் ஜெபக் குழுக்கள்** உருவாக்கப்பட்டன.

கர்த்தருடைய சித்தத்தின்படியே, **மதுரை, கோவை, திருச்சி, சென்னை, சேலம்** ஆகிய **5 மண்டலங்களில் சிறுவர் ஊழியக் குழுக்களை** எழுப்பத் திட்டமிட்டு, கடந்த வருடத்தில் மதுரை, கோவை ஆகிய மண்டலங்களுக்கு 2 சிறுவர் ஊழியக் குழுக்களை கர்த்தர் ஏற்படுத்திக் கொடுத்தார். அந்தக் குழுவினருக்கு ஒரு வாகனமும்,


நாலுமாவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் ஊழியத்திற்கான உபகரணங்களும், வீடியோ-ஆடியோ கருவிகளும் வழங்க கர்த்தர் கிருபை செய்தார்.

தொடர்ந்து திருச்சி, சென்னை, சேலம் ஆகிய 3 மண்டலங்களிலும் சிறுவர் ஊழியக் குழுவினரை ஏற்படுத்த ஜெபத்தோடு திட்டமிட்டு வருகிறோம். **சிறுவர் ஊழியம் செய்ய வாஞ்சையுள்ளவர்கள் எங்களை அணுகலாம்.**

## இளம் வாலிபர் முகாம்!

இளம் வாலிபர்களுக்கென்று, **ஈரோடு, கோவை, நாலுமாவடி, ஜெப மலை, சிவகாசி, மதுரை, திருச்சி, காட்டாத்துரை, உத்தமபாளையம், உசிலம்பட்டி** மற்றும் **பெங்களூரு** ஆகிய **11 இடங்களில்** நடத்தப்பட்ட **இளம் வாலிபர் முகாம்** மூலமாக, சுமார் **60,000**க்கும் அதிகமானோர் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

மட்டுமல்ல, 10, 11, மற்றும் 12வது வகுப்பு படிக்கும், சுமார் **68,000**க்கும் அதிகமான இளம் வாலிபர்களுக்காக, பல **இடங்களில் Out Going Student's** Meet நடத்த, கர்த்தர் கிருபை செய்தார். **ஜெப மலையில்** சுமார் **40** பேருக்கு, இளம் வாலிபர் **ஊழியப் பயிற்சி முகாம்** நடத்தப்பட்டது.

மேலும், **மார்த்தாண்டம், மதுரை, மேட்டுப்பாளையம், தூத்துக்குடி** உட்பட **23 இடங்களில், புதிதாக Good** Samaritan Club உருவாக்க, கர்த்தர் உதவி செய்தார்.

இந்த Club மூலமாக, கடந்த வருடத்தில் தமிழ்நாட்டில் உண்டான இயற்கைப் பேரழிவுகளினால் பாதிக்கப்பட்ட **சென்னை, கடலூர் (1,400 பேர்களுக்கு), தூத்துக்குடி (1,000 பேர்களுக்கு)** மற்றும் **நேபாளம், இலங்கை** போன்ற பல இடங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளைச் செய்து, மேலும் **8 இடங்களில் இலவச மருத்துவ முகாம்**களை நடத்தி, கிறிஸ்துவின் அன்பை அவர்களுக்கு வெளிப்படுத்தவும் கர்த்தர் உதவி செய்தார்.

## வாலிபர் ஊழியம்!



நாலுமாவடி

**'10 லட்சம் ஆத்தும ஆதாயம்!'** என்கிற புதிய தரிசனத்தோடு, **ஆந்திரா, மஹாராஷ்டிரா, கர்நாடகா** போன்ற மாநிலங்களிலும், தமிழ்நாட்டில் **புதுக்கோட்டை, மேலூர்** (மதுரை), **திண்டிவனம், திருவள்ளூர், செங்கல்பட்டு, பாவூர்சத்திரம், கடலூர்** போன்ற மாவட்டங்களிலும் புதிதாக நடத்தப்பட்ட **வாலிபர் கொண்டாட்டம்** மூலமாக, சுமார் **25,370** வாலிபர்கள் சந்திக்கப்பட்டார்கள்.

தமிழ்நாட்டில் **6 இடங்களில்** நடத்தப்பட்ட Achievers **கூடுகை**யில், சுமார் **22,370** மாணவர்கள் பங்கு பெற்றனர். இவர்களில் சுமார் **10,905** மாணவர்கள் **இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுள்ளனர்.** சுமார் **7,287** மாணவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்ததில், சுமார் **3,228** மாணவர்கள் **இரட்சிக்கப்பட்டுள்ளார்கள்.** கடந்த வருடத்தில், சுமார் **59,256** வாலிபர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க, கர்த்தர் உதவி செய்தார்.

**14 இடங்களில்** நடத்தப்பட்ட **பின் தொடர் ஊழியத்தின்** மூலமாக, **637** வாலிபர்கள் பயனடைந்தனர். **17 இடங்களில்** நடைபெற்ற **'சினெர்ஜியா' கூடுகை**யின் மூலமாக, **922** வாலிபர்கள் **சீஷர்களாக** வளர்ந்து வருகின்றனர். **8 மாவட்டங்களில், 'மவுண்ட் சீனாய்'** (ஒருநாள் உபவாச ஜெபம்) நடத்தப்பட்டதில், சுமார் **6,102** வாலிபர்கள் கலந்து கொண்டு, ஜெபிக்கிற **ஜாமக்காரர்**களாக தங்களை அர்ப்பணித்தனர்.

பள்ளிகள், கல்லூரிகள், திருச்சபைகள் மற்றும் விடுதிகளிலுமாக, **478 'இயேசுவின் நண்பன்'** ஜெபக் குழு உருவாக்கப்பட்டது. **"இயேசுவின் சிநேகிதன்"** ஜெபத் திட்டத்தில், **1,379** வாலிபர்கள் இணைந்தனர்.

**'சேனை' தலைமைத்துவப் பயிற்சி முகாம்** நடத்தப்பட்டு, 7 மாவட்டங்களிலிருந்து **70** வாலிபர்களை ஊழியம் செய்யும்படி உருவாக்கக் கர்த்தர் கிருபை செய்தார். **10 லட்சம் ஆத்துமா**க்களை சந்திக்கிற திட்டத்தில், இதுவரை **65,631 மணி நேரங்கள் ஜெபம் ஏறெடுக்கப்பட்டுள்ளது.** இந்த வாலிபர் ஊழியத்தின் மூலமாக, **2,72,799 ஆத்துமா**க்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும் கர்த்தர் கிருபை செய்தார்.

உங்கள் பகுதியில் **வாலிபர்கள் மத்தியில் ஊழியம் செய்ய விரும்பினால், 91766 44 202** என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## கடித ஊழியம்!

**கடிதம்** மூலமாக சுமார் **1,62,100** பேர்களும், மற்ற மொழிகளில் **(ஆங்கிலம், மலையாளம், கன்னடம், ஹிந்தி, தெலுங்கு)** சுமார் **1,600** பேர்களும், **SMS** மூலமாக சுமார் **14,000** பேர்களும், **Fax** மூலமாக சுமார் **75** பேர்களும், **E-Mail** மூலமாக சுமார் **47,150** பேர்களும் ஜெபத்திற்காகத் தொடர்பு கொண்டார்கள்.

சுமார் **9,000** பேர்கள், நமது **ஆலோசனை ஜெப மையத்திற்**கு வந்து ஜெபித்து, ஆசீர்வதிக்கப்பட்டார்கள். **திறப்பின் வாசல் ஜெபத்தில்** கலந்து கொண்டவர்களில், சுமார் **1,60,000** பேர்கள் ஜெப விண்ணப்பங்களை எழுதிக் கொடுத்திருந்தார்கள்.

நமது **கிளை அலுவலகங்கள்** மூலமாக சுமார் **20,000** பேர்களும், நடைபெற்ற **பெண்கள் முகாம்**கள் மூலமாக சுமார் **1,100** பேர்களும், **தொலைபேசி** ஊழியத்தின் மூலமாக சுமார் **2,27,800** பேர்களும் ஜெபிக்கக் கேட்டு, ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்திரிக்கை ஊழியம்!

கடந்த வருடத்தில், **6 மொழிகளில்** (தமிழ், தெலுங்கு, கன்னடம், தெலுங்கு, ஹிந்தி, மலையாளம்) வெளியிடப்பட்ட நமது **பத்திரிக்கைகள்** மூலமாக, இந்தியா மற்றும் இலங்கை தேசம் உட்பட, **42 வெளி நாடு**களிலுமாக, சுமார் **3,67,864**க்கும் அதிகமான **குடும்பங்கள்** ஆசீர்வதிக்கப்பட்டன.

**7வது மொழி**யாக, **சிங்கள மொழியி**லும் நமது **பத்திரிக்கை வெளியிட**க் கர்த்தர் கிருபை செய்தார். இந்தப் பத்திரிக்கை ஊழியத்தின் மூலமாக, கர்த்தர் எழுப்பிய சாட்சிகள் ஏராளம்! ஒவ்வொரு மாதமும் இந்தப் பத்திரிக்கை ஊழியத்திற்கான அனைத்துத் தேவைகளையும் கர்த்தர் அற்புதமாக சந்தித்துக் கொடுத்தார்.

## இணைய தள ஊழியம்!

சுமார் **6,83,173** பேர்கள் நமது **இணைய தள ஊழியத்தின்** மூலமாகவும், சுமார் **5,48,358** பேர்கள் **அனுதின வாக்குத்தத்த வசனத்தின்** மூலமாகவும், சுமார் **2,08,953** பேர்கள் **E_Magazine** மூலமாகவும், சுமார் **28,737** பேர்கள் **Mobile Appsல் Android** மூலமாகவும், சுமார் **856** பேர்கள் **Apple Device** மூலமாகவும், சுமார் **9,03,687** பேர்கள் **Web Tv**யின் **நேரடி ஒளிபரப்பி**ன் மூலமாகவும் பயனடைந்தனர். சுமார் **6,106** பேர்கள் **Online Shopping** மூலமாகவும் பயனடைந்தனர்.

மேலும், **குடும்ப ஆசீர்வாத ஜெபத் திட்டத்தில் 906** பேர்களும், **'இயேசுவின் சினேகிதன்'** திட்டத்தில் **643** பேர்களும், **'இயேசுவின் கண்மணிகள்'** திட்டத்தில் **644** பேர்களும், **'1 கோடி ஆத்துமாக்கள்'** திட்டத்தில் **143** பேர்களும், இந்த இணை தளத்தின் மூலமாக இணைந்தனர்.

எமது **இணைய தளங்கள்** இன்னும் பல **புதிய வடிவில் வெளிவர இருக்கிறது**. அதன் மூலமாக எமது **ஊழியத்தோடு தொடர்பு கொள்ள, ஜெபிக்க** எங்களது இணைய தளம் மற்றும் **Mobile Apps**ஐ பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## ஒலி-ஒளி நாடா ஊழியம்!

சுமார் **42, 000**க்கும் அதிகமான **பாடல் DVD, ACD** மற்றும் **MP3**க்களும், **தேவ செய்திகள்** அடங்கிய சுமார் **1,15,000**க்கும் அதிகமான **DVD**க்களும், **நாடகங்கள், பட்டிமன்றங்கள், Teli Serial**கள் அடங்கிய சுமார் **50,000**க்கும் அதிகமான **VCD** மற்றும் **DVD**க்களும் நமது தலைமை மற்றும் கிளை அலுவலகங்கள் மூலமாக வினியோகம் செய்யப்பட்டது.

மட்டுமல்ல, **5 மொழிகளில்** (**தமிழ், ஆங்கிலம், கன்னடம், ஹிந்தி** மற்றும் **புதிதாக தெலுங்கு**) சுமார் **95, 000**க்கும் அதிகமான **ஆவிக்குரிய புத்தகங்கள்** வினியோகம் செய்யப்பட்டன. மேலும், **நாலுமாவடி, கோயம்புத்தூர், பாண்டிச்சேரி, ஈரோடு, தஞ்சாவூர், திருப்பூர், பெரம்பலூர்** ஆகிய 7 இடங்களில், **"வேதாகமப் புத்தகக் கண்காட்சி"** நடத்தப்பட்டது. சுமார் **16,500**க்கும் அதிகமான **வேதாகமங்களை** வினியோகம் செய்யவும் கர்த்தர் கிருபை செய்தார். சுமார் **6,026** பேர் **Online Purchase** மூலமாகவும் நமது ஊழிய வெளியீடுகளைப் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

## சமுதாயப் பணிகள்!

நமது **'தேவனுடைய வீடு'** வளாகத்தில் செயல்பட்டு வருகிற **இலவச மருத்துவமனை** மூலமாக, கடந்த வருடத்தில் மட்டும், சுமார் **11,954 வியாதியஸ்தர்கள் இலவச மருத்துவ சிகிச்சை** பெற்றார்கள். மாதத்தின் முதல் சனிக்கிழமைதோறும் நடைபெற்ற **இலவச கண் சிகிச்சை முகாம்** மூலமாக, சுமார் **513 பேர்கள்** பயனடைந்தார்கள்.

நமது ஜெப மலை அருகிலுள்ள, **'கள்ளத்திக்குளம்'** என்கிற ஒரு கிராமத்தைப் பொறுப்பெடுத்து, **இலவச மருத்துவ முகாம்** நடத்தியதின் மூலமாக, **96 பேர்கள்** பயன் பெற்றார்கள்.

மேலும், அந்தக் கிராமத்திலுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள படிக்கிற ஏழைப் பிள்ளைகளுக்கு **கல்விக் கட்டணங்களைச்** செலுத்தவும், **பொறியியல் கல்வி, Nursing பயிற்சி** மற்றும் **உயர்நிலைக் கல்வி** கற்கும் ஏழைப் பிள்ளைகளுக்கு, நமது **புது வாழ்வு சங்கத்தின்** மூலமாக **கல்விக் கட்டணங்களைச்** செலுத்தி, அவர்களுடைய **படிப்பிற்கு உதவி செய்யவும்** கர்த்தர் கிருபை செய்தார்.

இப்படியாக, கடந்த வருடம் முழுவதும் நம்முடைய ஊழியத்தின் மூலமாக ஏழைப் பிள்ளைகளின் **கல்விக் கட்டணமாக** மட்டும், **₹ 22,65,000/-** கொடுக்கப்பட்டுள்ளது.

இதோடு கூட, அவ்வப்போது உண்டான **இயற்கைப் பேரழிவு**களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு **நிவாரணப் பணிகளையும், உதவிகளையும்** செய்து, கிறிஸ்துவின் அன்பை அவர்களுக்கு வெளிப்படுத்தவும், கர்த்தர் கிருபை பாராட்டினார்.

**இந்த ஊழியங்களுக்காக ஜெபித்தும், கொடுத்தும் தாங்கி வருகிற உங்கள் ஒவ்வொருவருக்கும், இந்த ஊழியத்தின் ஆசீர்வாதங்களில் நிச்சயமாகவே ஒரு பங்கைக் கர்த்தர் வைத்திருக்கிறார், தொடர்ந்து இந்த ஊழியங்களுக்கான உங்கள் ஜெபங்களை, நான் இன்னும் அதிகமாகவே எதிர்பார்க்கிறேன்.**

மட்டுமல்ல, கர்த்தர் உங்களை ஏவுகிறபடி உதாரத்துவமாகக் கொடுத்துத் தாங்குங்கள். நானும், **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியக் குடும்பத்தினரும் உங்களுக்காக **ஜெபிக்கிறோம்**. கடந்த வருடம் முழுவதும் இந்த ஊழியத்தை ஜெபத்தினாலும், காணிக்கைகளினாலும் தாங்கி வந்த **உங்கள் ஒவ்வொருவருக்கும்,**



# இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், எங்கள் மனமார்ந்த நன்றி!

– உங்கள் சகோதரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2016

# ஒரு புத்தாண்டு ஜெபம்!

“கிருபை நிறைந்த பரம பிதாவே, கடந்த வருடம் முழுவதும், அதற்கு முந்தைய வருடங்களிலும் உமது செட்டைகளின் கீழ் நீர் என்னை வைத்துப் பாதுகாத்ததற்காக, உம்மைத் **துதிக்கிறேன்!**

கர்த்தாவே, உமது அன்பின் கரங்களிலிருந்து நான் பெற்றிருக்கிற ஆன்மீக, உடலுக்கடுத்த, பொருளாதார ஆசீர்வாதங்கள் அனைத்திற்காகவும் உமக்கு **நன்றி!** இவைகள் ஒன்றிற்கும் என்னிடத்தில் தகுதியேதும் கிடையாது. அப்பா, எல்லாம் உமது கிருபையினாலேயே!

உமது குமாரனாகிய கிறிஸ்துவானவர், பரிசுத்த ஆவியானவர், பரிசுத்த வேதாகமம், உமது மக்களோடு உள்ள சகவாசம் ஆகிய ஈவுகளுக்காக, கர்த்தாவே, உம்மைத் **துதிக்கிறேன்!** நான் அல்ல, நீரே முதலாவது என்னிடத்தில் அன்பு கூர்ந்தீர்! ‘எனது வாழ்வின் துவக்கமும், முடிவுமானவர் நீரே!’ என்று, உம்மை **ஆராதிக்கிறேன்!**

கர்த்தாவே, இன்னொரு புதிய வருடத்திற்குள் நான் நுழைய, நீர் எனக்குக் கிருபை செய்ததற்காக, உம்மைத் **துதிக்கிறேன்!** என்னை விடப் பரிசுத்தமும், தேவ பக்தியும் நிறைந்திருந்தவர்களில் பலர், கடந்த வருடத்தில் இறந்து போய் விட்டனர்.

‘எனது வாழ்க்கை இன்னும் கனி நிறைந்து காணப்பட வேண்டும்.’ என்கிற உமது எதிர்பார்ப்பையே அது எனக்கு உணர்த்துகிறது. உம்மை நான் ஏமாற்றி விடாதிருக்கச் செய்யும்.

தேவனே, நீர் என்னிடத்தில் ஒப்படைத்துள்ள ‘தருணம்’, ‘தாலந்துகள்’, ‘தனம்’ ஆகியவற்றின் பொறுப்புகளில், நான் உத்தமமாக இருக்க எனக்கு **உதவி செய்தருளும்.** ‘இந்த ஆசீர்வாதங்களுக்கெல்லாம் நான் சொந்தக்காரன் அல்ல. பயன்படுத்துவதற்காக மட்டுமே இவைகள் என்னிடத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.’ என எப்பொழுதும் **என்னை உணரச் செய்யும்.**

எனது ஜெபமின்மை, வேத தியான அசட்டை, ஆத்தும ஆதாயத்திலும், நற்செய்தியை அறிவிப்பிலும் எனக்கு இருக்கிற சோம்பல், தான-தர்மத்தில் கஞ்சத்தனம் ஆகியவற்றை உம்மிடத்தில் நான் அறிக்கையிடுகிறேன்.

இயேசுவே, உம்மைப் போலப் பார்க்க, என் **கண்களைத் திறந்தருளும்!** உமக்காகப் பேச, எனது **வாயைத் திறந்தருளும்!** உம்மைப் போல் தாராளமாயிருக்க, என் **கைகளைத் திறந்தருளும்!** என்னை மறுபடியுமாக உமது பலி பீடத்தில் கிடத்துகிறேன்.

அக்கிரமமும், அன்பின்மையும் பெருகி வரும் இந்தக் கடைசி நாட்களில், இயேசுவே, எனது குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், உடன் விசுவாசிகள், உடன் பணியாளர்கள் யாவரிடமும் நான் அன்புடன் பழகவும், அவர்களது உரிமைகளை மதித்து நான் நடக்கவும் **எனக்கு உதவி செய்யும்.**

யாவரோடும் நான் சமாதானத்துடன் வாழவும், சமாதானத்திற்காகப் பாடுபடவும் தக்கதான பாதையில் **என்னை நடத்தும்.** தீமைக்கு நன்மை செய்து, தன்னலமற்று மற்றவர்களிடம் அன்பு செலுத்த எனக்கு **அருள் தாரும்.**

அன்புள்ள பிதாவே, இந்த வருடத்தில் நான் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர எனக்கு **உதவி செய்யும்.** எனக்குள் குடி கொண்டிருக்கிற ஆவியானவரது ஒத்தாசையினால், நான் உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப்போல மாறிக் கொண்டேயிருக்க எனக்கு **அருள் செய்யும்.** நான் வெற்றியின் மேல் வெற்றியையும், பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தத்தையும், மகிமையின் மேல் மகிமையையும் அடைய வாஞ்சிக்கிறேன். எனது வாஞ்சையை எனக்கு **நிறைவேற்றித் தாரும்.**

பிதாவே, உமது குமாரனை நீர் சீக்கிரமாக இந்த உலகத்திற்குள் திரும்பவும் அனுப்ப இருக்கிறதற்காக, உம்மைத் **துதிக்கிறேன்!** அவரது வருகைக்காக நாங்கள் வாஞ்சித்து நிற்கிறோம். அந்த மகிமையான நிகழ்வுக்காக நாங்களும் ஆயத்தப்பட்டு, மற்றவர்களையும் ஆயத்தப்படுத்த **உதவி செய்யும்.**

உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்து, உமக்கு முன்பாக எங்களைக் குற்றமற்றவர்களும், பழுதற்றவர்களுமாக நிறுத்தப் போவதற்காகவும், நாங்கள் உம்மோடு கூட புதிய வானம், புதிய பூமியில் என்றென்றுமாக வாழப் போவதற்காகவும், பரவசத்துடன் **உம்மைப் போற்றுகிறோம்.**

எங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் மூலம், எல்லாத் **துதியும், கனமும், மகிமையும் உமக்கே உண்டாவதாக!** ஆமென்!

– R. ஸ்டான்லி,
‘Stanley On Bible’, வேலூர்.

இம்மாத, **‘முடிவுக்கு முன்...’** மற்றும் **‘புத்தியுள்ள ஸ்திரீ!’** என்கிற செய்தித் தொடர்கள், அடுத்த மாதம் வெளியாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலுமாவடி திறப்பின் வாசல் ஜெப சாட்சிகள்!

# அதிசயங்களைக் காண்பீர்கள்!

இயேசு கிறிஸ்து அதிசயமானவர்! அவரை நோக்கிக் கூப்பிட்ட யாவருக்கும் அவர் அதிசயங்களைச் செய்தார். உங்களுக்கும் அவர் செய்வார். நீங்கள் அவரைக் கூப்பிட்டால், உங்களுக்கும் அதிசயங்கள் நடக்கும்! இதற்காகத்தான் திறப்பின் வாசல் ஜெபத்தைக் கர்த்தர் ஏற்படுத்தினார். உங்களோடு சேர்ந்து, உங்களுக்காக நாங்களும் திறப்பின் வாசல் ஜெபத்தில் ஜெபிப்போம். கடந்த நாட்களில் ஜெபத்தைக் கேட்டு, இயேசு கிறிஸ்து செய்த அதிசயங்களைப் பாருங்கள்:

## நிந்தனைகளை மாற்றினார்!



எங்களுக்குத் திருமணம் முடிந்து **8 வருடங்களாகியும், குழந்தை பாக்கியம் இல்லாமல்** இருந்தபடியினால், நாங்கள் பட்ட **நிந்தனைகளுக்கும், அவமானத்திற்கும் அளவேயில்லை.** எத்தனையோ டாக்டர்களைப் போய் பார்த்தும், எந்த பலனும் இல்லாத நிலையில், திறப்பின் வாசல் ஜெபத்தில் குடும்பமாகக் கலந்து கொண்டு, கண்ணீரோடு ஜெபித்தோம். கர்த்தர் கிருபையாக என் மனைவியின் கர்ப்பத்தை ஆசீர்வதித்து, நாங்கள் கேட்டுக் கொண்டபடியே ஒரு அழகான **ஆண் குழந்தையைப் பெற்றெடுக்க** அவளுக்குக் **கிருபை செய்து, நிந்தனைகளை மாற்றினார்.** – **K. முத்தையா, ஆறுமுகநேரி.**

## நீரிழிவு வியாதி சுகமானது!



நான் **நீரிழிவு நோயினால் (Sugar)** பாதிக்கப்பட்டிருந்தேன். கடந்த 2015 மார்ச் மாதம் பரிசோதனை செய்து பார்த்தபோது, இரத்தத்தில் **சர்க்கரையின் அளவு 353** ஆக இருந்தது. டாக்டர்கள், "நீங்கள் வாழ் நாளெல்லாம் மாத்திரை சாப்பிட வேண்டும். அதிலும் கட்டுப்படாத பட்சத்தில், தினந்தோறும் இன்சுலின் ஊசிதான் போட்டுக் கொள்ள வேண்டும்." என்று சொல்லி விட்டார்கள். நான் **மிகுந்த மன வேதனையோடு,** ஜுலை மாத திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டேன். அன்றைய தின செய்தி வேளையில் நமது சகோதரர் அவர்கள், "சர்க்கரை வியாதியை சுகப்படுத்தவே முடியாது.' என்று அனேகர் சொல்கிறார்கள். ஆனால், தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை." என்று சொன்னார்கள்.

நானும் அதை விசுவாசித்து, ஜெப வேளையில் மிகுந்த பாரத்தோடு ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, அற்புதமான **சுகத்தை எனக்குக் கொடுத்தார்.** அதற்குப் பிறகு நான் மாத்திரை ஏதும் சாப்பிடாமல், நல்ல **ஆரோக்கியமாக இருக்கிறேன். – T. லில்லி கேத்தரின்,** நாகர்கோவில்.

## கட்டி மறைந்தது!



என் மகனுடைய கழுத்துப் பகுதியில் ஒரு **பெரிய கட்டி** இருந்தது. ஜெப வேளையில் சகோதரர் அவர்கள் கேட்டுக் கொண்டபடியே, அந்த இடத்தில் கை வைத்து ஜெபித்தேன்.

கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, அந்தக் **கட்டியை** இருந்த இடம் கூடத் தெரியாத அளவிற்கு, மிக அற்புதமாக **மறையச் செய்து விட்டார். – ஷர்மிளா, வீரபாண்டியன்பட்டினம்.**

## 25 வருட, போராட்டத்திலிருந்து விடுதலை!

சுமார் **25** வருடங்களாக நான் **அசுத்த ஆவியின் பிடியில்** சிக்கி, வேதனைப்பட்டேன். இரவு நேரங்களில் அந்த ஆவி ஒரு பெண் ரூபத்தில் அடிக்கடி என் கண்களுக்கு முன்பாக வந்து நின்று கொண்டும், என்னை **நிம்மதியாகத் தூங்க விடாமல்,** என் கழுத்தைப் பிடித்து நெறித்து, **உபத்திரவப்படுத்திக்** கொண்டும் இருக்கும்.

மேலும், எனக்குள் எப்பொழுதும் **தற்கொலை எண்ணமும்** இருந்து கொண்டேயிருந்தது.

ஜெப வேளையில் சகோதரர் அவர்கள், அசுத்த ஆவியின் பிடியில் சிக்குண்டு வந்திருந்த ஜனங்களின் விடுதலைக்காக ஜெபத்தை ஏறெடுத்தபோது, என்னால் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு கர்த்தருடைய வல்லமை எனக்குள் கடந்து வந்தது. அந்த வினாடியே 25 வருடங்களாக எனக்குள்ளிருந்த **அசுத்த ஆவி** முழுவதுமாக என்னை விட்டு **வெளியேறிப் போயிற்று.** அந்நேரம் முதல், நான் **பூரண விடுதலையோடு** இருக்கிறேன். – **தேன் மொழி,** நாகர்கோவில்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்று நோயை சுகமாக்கினார்!

என் கணவர், **குரல் வளையில் புற்று நோயினால்** பாதிக்கப்பட்டார். டாக்டர்கள், "குரல் வளையை முழுவதுமாக ஆபரேஷன் செய்து எடுத்து விட வேண்டும்." என்று சொன்னார்கள். **மிகுந்த மன வேதனையோடு**, நாங்கள் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, "ஆபரேஷனே இல்லாமல் சுகம் தாரும் ஆண்டவரே!" என்று, மிகுந்த கண்ணீரோடு ஜெபித்து விட்டுச் சென்றோம். மறுபடியுமாகப் பரிசோதித்துப் பார்த்தபோது, டாக்டர்களே ஆச்சரியப்படுகிற அளவிற்கு, மிக அற்புதமாக **புற்று நோயை கர்த்தர் மறையச் செய்து, ஆபரேஷனே இல்லாமல்**, என் கணவருக்கு **பூரணமான சுகத்தைக்** கொடுத்தார். - N. ரோஸ்மேரி, கடியப்பட்டினம்.



## 12 வருட, தலைவலி சுகமானது!



சுமார் **12 வருடங்களாக, தீராத தலைவலியினால்** பாதிக்கப்பட்டேன். அதனிமித்தமாக, பார்த்துக் கொண்டிருந்த நல்ல ஒரு வேலையை விட்டு விட வேண்டியதாயிற்று. எவ்வளவோ சிகிச்சைகள் செய்து பார்த்தும், சுகம் கிடைக்கவில்லை. ஜெப வேளையில், ஆவியானவர் சகோதரர் அவர்கள் மூலமாக என் பிரச்சனையை வெளிப்படுத்திச் சொல்லி, கர்த்தர் எனக்கு சுகம் தருவதாக வாக்குப் பண்ணினார்.

நானும் விசுவாசத்தோடு ஜெபித்தேன். அப்பொழுது கர்த்தருடைய வல்லமை என் தலைப் பகுதியில் இறங்கியதை உணர்ந்தேன். அந்நேரமே **12 வருடங்களாக** இருந்த **தலைவலி மிக அற்புதமாக சுகமாயிற்று**. - **பிரிஸ்ஸில்லா**, நாகர்கோவில்.

## புது ஜீவனைக் கொடுத்தார்!

என் கணவர், **மஞ்சள் காமாலையினால்** கடுமையாகப் பாதிக்கப்பட்டார். எவ்வளவோ சிகிச்சைகள் செய்தும் பலனில்லாமல், **சரீரம்** முழுவதும் **வீங்கி**, மிக இக்கட்டான நிலைமைக்கு உள்ளானார். டாக்டர்கள், "கல்லீரல் பாதிக்கப்பட்டுள்ளது. அதை மாற்ற வேண்டும்." என்று சொன்னார்கள். நான் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, கண்ணீரோடு ஜெபித்தேன். கர்த்தர் என் கணவருக்குப் **பரிபூரண சுகத்தைக்** கொடுத்து, **ஆபரேஷனே இல்லாமல்**, புது **ஜீவனைக் கொடுத்தார்**. - D. **ஹெலன் சவரியம்மாள்**, புளியங்குடி.



## அற்புதங்களைச் செய்தார்!

14 வருடங்களாக நான் செய்து கொண்டிருந்த **வியாபாரத்தில்**, எந்த விதமான **ஆசீர்வாதமும் இல்லை**. இந்நிலையில், திடீரென்று ஒருநாள் ஒரு விபத்தில் சிக்கி, **கை எலும்புகள் பாதிக்கப்பட்டு**, தொடர்ந்து **வியாபாரம் செய்ய முடியாத நிலைமையாகி** விட்டது. இதனிமித்தமாக, **தற்கொலை எண்ணத்தோடு இருந்தேன்**.

கடந்த 2015 ஆகஸ்ட் மாத திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, "**ஒவ்வொரு மாதமும் நான் உபவாசத்தோடு திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொள்வேன். ஞாயிற்றுக் கிழமைதோறும் கடையை மூடி விட்டு, குடும்பமாக ஆலயத்திற்குச் செல்வேன். பீடி, சிகரெட், மது மற்றும் போதை வஸ்துக்களை விற்பனை செய்வதில்லை.**" என்று **3 பொருத்தனைகளைச் செய்து**, ஜெபித்து விட்டுச் சென்றேன்.



அடுத்த செப். மாதத் திறப்பின் வாசல் ஜெபத்தின் ஜெப வேளையில், கர்த்தருடைய ஆவியானவர் நமது சகோதரர் அவர்கள் மூலமாக **என்னைப் பெயர் சொல்லியழைத்து**, என்னை ஆசீர்வதிப்பதாக வாக்களித்தார். தான் சொன்னபடியே **தற்கொலை எண்ணத்திலிருந்து** என்னை **விடுவித்து, பிரச்சனைகளை மாற்றி, வியாபாரம் ஆசீர்வதிக்கப்படவும், சொந்தமாக** ஒரு **வீட்டைக் கட்டி முடிக்கவும்** கிருபை செய்து, என்னை ஆசீர்வதித்தார். - **ஜாண் ஜெபராஜ்**, தாளமுத்து நகர்.

இவர்களுக்கு அற்புதம் செய்த இயேசு கிறிஸ்து, உங்களுக்கும் அற்புதம் செய்வார்! உங்கள் காரியம் எதுவாயிருந்தாலும், கடிதத்தில் உங்கள் முகவரியைப் பின்கோடுடன் தெளிவாக எங்களுக்கு எழுதுங்கள். நீங்களும் விசுவாசத்தோடு இந்த நாளில் உபவாசித்து ஜெபியுங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்கும் அற்புதம் செய்வார்! திறப்பின் வாசல் ஜெபத்தன்று, காலை 9:00 மணியிலிருந்து, மதியம் 2:00 மணிவரை ஜெபிப்போம். நீங்களும் இதே நேரத்தில் எங்கிருந்தாலும் ஜெபியுங்கள். ஜெபத்தில் கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் பதிலை உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.

முகவரி: 57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA. Phone: 011 - 2930 152.

வத்தளையில் - திறப்பின் வாசல் ஜெபம்!

**உங்கள் அற்புதத்தின் நாள்:**


**பிப்ரவரி 6**

(முதல் சனிக்கிழமை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவின் அன்பைச் சுமந்து செல்லும்

# தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்!





"...நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் **சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்."** (மாற்கு 16:15) என்ற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்படிந்து, 1996ம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட நமது தொலைக்காட்சி ஊழியத்தின் மூலமாக, லட்சக்கணக்கான மக்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பையும், மெய்யான விடுதலையையும் ருசித்து வருகின்றன.

இந்தியா, இலங்கை...உள்ளிட்ட பல நாடுகளில், ஏராளமான தொலைக்காட்சி நிலையங்கள் மூலமாக நமது நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகி வருகிறது.

கர்த்தர் கொடுத்த தரிசனத்தின்படி, "ஒரு கோடி ஆத்துமா"க்களை இரட்சிப்பின் பாதையில் நடத்தும் திட்டத்தில் தொலைக்காட்சி ஊழியத்தின் மூலமாக மட்டும், **70 லட்சம் ஆத்துமாக்களைச்** சந்திக்க ஜெபித்து, திட்டமிட்டு செயல்படுகிறோம்.

இலங்கையில் **சுவர்கா, சுவர்கம்,** Dialog T.V. மற்றும் Angel T.V. மூலமாக பல நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகிறோம்.

பாடல்கள், நாடகங்கள், சாட்சிகள் மற்றும் சகோ. **மோகன் சி. லாசரஸ்** அவர்களின் தேவ செய்திகளடங்கிய நிகழ்ச்சிகள் மூலமாக, பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆசீர்வதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த ஊழியத்திற்கு உங்கள் ஜெபம் அதிகமாகத் தேவை. சிங்கள மொழியிலும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப ஜெபித்து வருகிறோம். ஒரே நேரத்தில் சுவிசேஷம் சொல்ல முடியாத இடங்களுக்கு, கர்த்தருடைய வார்த்தைகளை எடுத்துச் செல்லும் இந்த ஊழியத்தின் **தேவைகளும் ஏராளம்.**

நீங்களும் ஜெபித்து, தொலைக்காட்சி **ஊழியப் பங்காளராக எங்களோடு இணைந்து ஊழியம் செய்யலாம்.**

மாதந்தோறும் **100 ரூபா / 500 ரூபா,** அல்லது கர்த்தர் உங்கள் ஏவுகிறபடி இந்த ஊழியத்திற்காகக் **கொடுத்துத் தாங்க முன் வருவீர்களானால், எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.** பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்! - உங்கள் சகோதரன்.

## காணத் தவறாதீர்கள்!



**ஏஞ்சல் டி.வியில்** (சனிக்கிழமை தவிர)

**தினமும் காலை 7:30 - 8:00, இரவு 11:30-12:00.**

**செவ்வாய் கிழமைதோறும்** காலை 10:00 - 10:30.

**வியாழக் கிழமைதோறும்** இரவு 9:00 - 9:30.

**சனிக்கிழமைதோறும்** மதியம் 2:30 - 3:00.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஸ்වර්ග TV சுவர்க | Swarga

**சுவர்க** டி.வியில்

திங்கள், செவ்வாய், புதன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில், காலை மற்றும் இரவு **8:00** மணிக்கு.

சுவர்க்கம் TV ස්වර්ගම | Swargam

**சுவர்க்கம்** டி.வியில்

பாடல்கள், நாடகங்கள், சாட்சிகள் மற்றும் பல...
தினமும் காலை மற்றும் இரவு **7:30** மணிக்கு.

Dialog TELEVISION

**Dialog TVயில்** *(God Channel)*

திங்கள் முதல், வெள்ளி வரை மதியம் **12:30** மணிக்கு.

**சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களின் தேவ செய்திகளைக் கேட்டு,
*ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!*

# கிளிநொச்சியில்

இயேசு விடுவிக்கிறார்




முகவரி: இல. 31, உதயநகர் கிழக்கு,
நாகதம்பிரான் கோவில் வீதி,
கிளிநொச்சி.
Ph: 021 - 2285 284.

அலுவலக நேரம் தினமும் காலை 9:00 - மாலை 7:00 மணிவரை.

**இங்கு நடைபெறும் ஊழியங்கள்!**

**பெண்கள் ஜெபம்!**
(புதன்கிழமைதோறும்)
12:00 A.M. - 3:00 Noon

**உபவாச ஜெபம்!**
(சனிக்கிழமைதோறும்)
9:00 A.M. - 12:00 Noon

**சினெர்ஜியா** வாலிபர் கூட்டம்!
(சனிக்கிழமைதோறும்) 4:00 P.M. - 5:00 P.M.

**இலங்கை தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திறப்பின் வாசல் ஜெபத்தில்
# தேவன் எழுப்பிய துதியின் சேனை!

**ஒவ்வொரு மாதமும், முதல் சனிக்கிழமை**களில் நாம் நடத்தி வருகிற **திறப்பின் வாசல் ஜெபங்களில்** கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்து வருகிறார். கடந்த 2015 டிசம்பர் மாத ஜெபம், **வத்தளை**-பிரதேச சபை மண்டபத்தில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. பல்வேறு திருச்சபைகளைச் சேர்ந்த **16 போதகர்**களும், **200**க்கும் அதிகமான தேவப் பிள்ளைகளும் கலந்து கொண்டு, தேசத்தின் ஆசீர்வாதங்களுக்காக, கண்ணீர் மல்க பிரார்த்தனைகள் ஏறெடுத்தனர்.

**'இயேசு நம்மோடு'** சபையைச் சேர்ந்த Pr. **அஜித்** அவர்கள் குழுவினர் இன்னிசையோடு கூடிய பாடல்-ஆராதனை வேளைகளை நடத்தியபொழுது, தேவப் பிரசன்னம் அளவில்லாமல் இறங்கியது. Pr. **ஜேசுதாசன்** அவர்கள் (Christian Family Church) தேசத்திற்காக ஜெபங்களை நடத்த Pr. **டிரோன்** அவர்கள் விதவைத் தாய்மார்களுக்காகவும் Pr. **உதயா** அவர்கள் சிறு பிள்ளைகளுக்காகவும் பிரார்த்தனைகள் ஏறெடுத்தார்கள்.

Pr. **ஜாண் பாலக்குமார்** அவர்கள் ('நம்பிக்கையின் வாசல்' ஊழியங்கள்) விசுவாசத்தைக் குறித்ததான வல்லமையான செய்தியளித்து ஜெபித்த வேளையில், வந்திருந்த ஒவ்வொருவரையும் கர்த்தர் தொட்டு பலப்படுத்தினார்.

சகோ. **டோனி** அவர்கள், தேவ செய்திகளை சிங்களத்தில் மொழி பெயர்த்து வழங்கினார்கள். சகோதரி **கிறிஸ்டின்** அவர்கள் ஊழிய விபரங்களைப் பகிர்ந்து கொண்ட பின்னர், **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியப் பிரதிநிதிகள், சகோ. **வெனிஸ்டர்**, சகோ. **அமுதன்,** சகோதரி **வதனா** ஆகியோரது முயற்சியில் 13 வயதுக்குட்பட்ட 44 பிள்ளைகளுக்கு சிறப்புப் பரிசுகளும், விதவைத் தாய்மார்களுக்கு பண உதவிகளும் வழங்கப்பட்டன.

முந்தைய திறப்பின் வாசல் ஜெபங்களில் கலந்து கொண்டு, அற்புதங்களைப் பெற்ற அனேக மக்கள் சாட்சி கூறி கர்த்தரை மகிமைப்படுத்தினர். இந்த ஜெபத்திற்கான சகல ஏற்பாடுகளையும், 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியப் பொறுப்பாளர், சகோ. **விக்டர்** அவர்கள் தலைமையில், ஊழியப் பிரதிநிதிகள் சிறப்பாகச் செய்திருந்தனர்.



பாடல் ஆராதனை வேளை



Pr. ஜேசுதாசன்



Pr. டிரோன்



கலந்து கொண்ட போதகர்கள்



சிறுபிள்ளைகளின் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள்



செய்தி வேளை



கூடி வந்த மக்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விதவைத் தாய்மார்களுக்கு உதவிகள்







சிறு பிள்ளைகளுக்குப் பரிசுகள்

## வத்தளை - திறப்பின் வாசல் ஜெப சாட்சிகளில் சில...

**– ரட்ணம்**, வத்தளை.

நான் கடந்த திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, என் மருமகளின் **சுகப் பிரசவத்திற்காக** ஜெபித்தேன். கர்த்தர் அவளுக்கு நல்லதொரு சுகப் பிரசவத்திலே ஒரு ஆண் **குழந்தையைப் பெற்றெடுக்கும்**படியாகக் கிருபை செய்தார்.



**– ஜீன் மேரி**, கொட்டாஞ்சேனை.

எனது மகளுடைய திருமணம் முடிந்து 3 வருடங்களாகியும், **விசா கிடைக்காமல்** இருந்தது. நான் கடந்த 2015 அக். 3ம் தேதியன்று நடைபெற்ற திறப்பின் வாசல் ஜெப தினத்தன்று சகோ. R. **ஜெபசிங்** அவர்களிடம், இதற்காக ஜெபிக்கக் கேட்டுக் கொண்டு ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, ஜெபித்த அடுத்த மாதமே **விசா கிடைக்க** கிருபை செய்தார்.



**– ஆறுமுகம் மகேஸ்வரி**, எட்டம்பொலவத்தை.

கடந்த திறப்பின் வாசல் ஜெபங்களில் எனது மகனின் **தொழிலுக்காக** தொடர்ந்து ஜெபித்து வந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, தொழிலில் எந்த ஒரு முன் அனுபவம் இல்லாத என் மகனுக்கு, நல்ல ஒரு இடத்தில் **தொழில் கிடைக்கவும்**, குறுகிய காலத்திலேயே **பதவி உயர்வு கிடைக்கவும்** கர்த்தர் கிருபை செய்துள்ளார்.



அன்புப் போதகர்களே... ஜெப வீரர்களே! இலங்கைக்காக ஜெபிக்க,

# நீங்களும் வாருங்கள்!

# கொழும்பில் திறப்பின் வாசல் ஜெபம்!

நாள்: 2015 **பிப்ரவரி 6** (சனிக்கிழமை)

நேரம்: **காலை 09:00 - மதியம் 2:00.**

இடம்: **காலி முக கிறிஸ்து நாதர் ஆலய மண்டபம்,**

**Christ Church Galle Face, Colombo 03**

**(Near the Ramada Hotel)**

**தேவ செய்தியும், ஜெபமும்:**

**இயேசு விடுவிக்கிறார் குழுவினர்.**

நேரில் வர முடியாதவர்கள், உங்கள் தனிப்பட்ட, குடும்ப மற்றும் ஆவிக்குரிய பிரச்சனைகளுக்காக ஜெபிக்க வேண்டுமானால், கடிதம் மூலமாகத் தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, கர்த்தர் கொடுக்கும் பதிலை உங்களுக்கு அனுப்புவோம்.


**கர்த்தர் உங்கள் சிறையிருப்பை மாற்றுவார்.**

எங்கள் முகவரி: *57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA.*

*Phone: 011 - 2930 152.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மத்தியக் கிழக்கு நாடுகளுக்காக மன்றாடுவோம்!

ஒவ்வொரு வருடமும், அந்த வருடத்தின் இறுதி நாட்களில், வர இருக்கிற புதிய வருடத்தில் செய்ய வேண்டிய ஊழியக் காரியங்களைக் குறித்த தேவ சித்தத்தை அறிந்து கொள்ள, 3 நாட்கள் உபவாசத்தோடு கர்த்தருடைய பாதத்தில் காத்திருப்பது வழக்கம்.

இந்த ஜெபத்தில், '**இயேசு விடுவிக்கிறார்**' ஊழியர்களோடு, சகோ. **வின்சென்ட் செல்வக்குமார்** அவர்களும், இன்னும் பல தேவ ஊழியர்களும் கலந்து கொண்டு ஜெபிப்பார்கள். இந்த ஜெபத்தில், இந்தியா மற்றும் பல உலக நாடுகளில் நடைபெறப் போகிற காரியங்களைக் கர்த்தர் வெளிப்படுத்துவதோடு, அதற்காக, "இயேசு விடுவிக்கிறார்' ஊழியம் என்னென்ன செய்ய வேண்டும்?" என்றும் அனேக ஆலோசனைகளையும் தருவார்.

கடந்த சில வருடங்களாகவே மத்தியக் கிழக்கு நாடுகளைக் குறித்து, கர்த்தர் பல காரியங்களைப் பேசி வந்தார். அந்த தேசங்களில் மகிமையான எழுப்புதல் வரப் போவதாகவும், "அதற்கு முன், மாபெரும் கலவரங்களை அந்த தேசங்கள் சந்திக்க வேண்டியதிருக்கும்!" என்றும் கர்த்தர் வெளிப்படுத்தினார்.

எனவே, கடந்த 4 வருடங்களாக **ஐக்கிய அரபு எமிரேட்ஸ்** நாடுகள் மற்றும் **ஓமான்** தேசத்திற்குச் சென்று உபவாச ஜெபங்களை நடத்தி, அங்குள்ள தேவப் பிள்ளைகளுக்கு ஒரு ஜெப விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம். அதே போல் கடந்த 2015ம் வருடம் நவம்பர் மாதத்தில், அங்கு உபவாச ஜெபங்களை நடத்த 'இயேசு விடுவிக்கிறார்' குழுவினராகக் கடந்து சென்றோம்.

## ஓமான்

நவ. 16 முதல், 24ம் தேதிவரை, **ஓமான்** தேசத்தில் கர்த்தருடைய ஊழியங்களை நிறைவேற்றினோம். நவ.16ம் தேதி **சோஹாரிலும்**, 17ம் தேதி **மஸ்கட்**- ரூவி சபை வளாகத்திலும் நடைபெற்ற **இரவுக் கூட்டங்களுக்கு** திரளான ஜனங்கள் கடந்து வந்தார்கள்.

நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டு ஜெபித்தபொழுது, அனேகர் அற்புதங்களைப் பெற்றுக் கொண்டார்கள். சோஹார் ஊழியங்களை PCO தமிழ் பிரிவும், OTCC நிர்வாகமும் இணைந்து, மிக நேர்த்தியாக ஒழுங்கு செய்திருந்தார்கள்.

அதைத் தொடர்ந்து, நவ. 19ம் தேதி காலை 9:00 மணிமுதல், மாலை 6:00 மணி வரையிலும், இரவு 10:00 மணிமுதல், அதிகாலை 5:00 மணி வரையிலும், 21ம் தேதி காலை 9:00 மணிமுதல், மாலை 5:00 மணி வரையிலும் உபவாசித்து, மத்தியக் கிழக்கு நாடுகளுக்காக ஜெபிக்க, கர்த்தர் கிருபை செய்தார்.

இந்த ஜெபத்தில், 21 திருச்சபைகளைச் சேர்ந்த போதகர்கள் மற்றும் விசுவாசிகளாக, சுமார் **1,200**க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு பாரத்தோடு ஜெபித்தார்கள்.

ஒவ்வொரு ஜெப வேளையிலும் ஆவியானவர் பலமாகக் கிரியை செய்தார். அனேகருடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு, வரும் நாட்களில் நடைபெறப் போகிற காரியங்களை தரிசனங்களாகக் கண்டு சபைக்கு தெரியப்படுத்தினார்கள்.

மஸ்கட் ஊழியங்களை '**விசுவாச நங்கூரம் பூரண சுவிசேஷத் திருச்சபை**'யின் போதகர்கள், Pr. **குணசீலன்**, Pr. **ஐசக்** ஆகியோர் தலைமையில், திருச்சபை மக்கள் மிக நேர்த்தியாகச் செய்திருந்தார்கள்.

அதைத் தொடர்ந்து நவ. 22, 23, 24 தேதிகளில் ஓமான் தேசத்திலுள்ள, '**சலாலா**' என்கிற பகுதியில் ஊழியங்களை நிறைவேற்றக் கடந்து சென்றோம். இந்தப் பகுதிதான் பக்தனாகிய **யோபு** வசித்த பகுதியாகும். அவருடைய கல்லறை இன்னும் அந்தப் பகுதியில் இருக்கிறது!

**மஸ்கட் - உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டு ஜெபித்தவர்கள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 நாட்களும் இரவு 7:00 மணிமுதல், 10:00 மணிவரை, தேசத்திற்காக ஜெபிக்கிற **விசேஷித்த ஜெபக் கூட்டங்கள்** அங்குள்ள சபை வளாகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு கூட்டத்திற்கும் சுமார் **400**க்கும் அதிகமான தேவப் பிள்ளைகள் கடந்து வந்து ஜெபித்தார்கள். ஆவியானவர் பலமாய் அசைவாடினார். ஜெபித்ததின் விளைவாக, தேசத்தில் நடைபெறப் போகிற காரியங்களை கர்த்தர் வெளிப்படுத்தினார். பெத்தேல் திருச்சபை போதகர், Pr. **ஸ்வரூப் குமார்**, சகோ. **அகஸ்டின்**, சகோ. **ஜெயராஜ்** ஆகியோர், இந்தக் கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக செய்திருந்தார்கள்.

தேவன் பயன்படுத்திய பாத்திரங்கள்



ஒவ்வொரு இடத்தில் நடந்த கூட்டங்களிலும், நமது சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்களும், சகோ. A. **அப்பாத்துரை** அவர்களும், சகோ. S. **சாம் ஜெபராஜ்** அவர்களும், கர்த்தருடைய வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டு, ஜெபத்தில் வழி நடத்தினார்கள். சகோ. **ஜாண் பன்னீர் செல்வம்** அவர்கள், பாடல்-ஆராதனை வேளைகளைப் பொறுப்பெடுத்து நடத்தினார்கள்.

**மெய்யாகவே ஓமான் தேசத்தில் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்தார்!**

# துபாய்

அதைத் தொடர்ந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (U.A.E.) தேசங்களின் எழுப்புதலுக்காகவும், பாதுகாப்பிற்காகவும் ஜெபிக்க, **துபாய்** பட்டணத்தில் டிச. 2ம் தேதி **12 மணி நேர உபவாச ஜெபம்** ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. புது வாழ்வு திருச்சபையின் போதகர், Pr. **டேவிட் ராஜ்** அவர்களும், **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியப் பிரதிநிதி, சகோ. **ஜோனா ஜெஸியா** அவர்களும் இந்த உபவாச ஜெபத்திற்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக செய்திருந்தார்கள்.

இந்த உபவாச ஜெபத்தில், பல்வேறு திருச்சபைகளைச் சேர்ந்த சுமார் **1,200**க்கும் அதிகமான தேவப் பிள்ளைகள் உபவாசத்தோடு வந்து ஜெபித்தார்கள். எழுப்புதலைக் குறித்தும், மத்தியக் கிழக்கு நாடுகளில் சம்பவிக்கப் போகிற காரியங்களைக் குறித்தும் நமது சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்கள் பகிர்ந்து கொண்டு, பல்வேறு விதமான ஜெபங்களை நடத்திய ஜெப வேளைகள் மகிமையாக இருந்தன. யுத்த ஜெபத்தைக் குறித்து சகோ. S. **சாம் ஜெபராஜ்** அவர்கள் தேவ செய்தியளித்து, ஜெபத்தில் வழி நடத்தினார்கள்.

வந்திருந்த அத்தனை பேரும் ஜெப அக்கினியினால் நிரப்பப்பட்டு, "தினந்தோறும் தேசத்திற்காக ஜெபிப்போம்!" என்கிற வைராக்கியத்தோடு புறப்பட்டுச் சென்றிருக்கிறார்கள்.

பிரியமானவர்களே, **மத்தியக் கிழக்கு நாடுகளுக்காக, தொடர்ந்து மன்றாடி ஜெபிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது**. காரணம், அங்கே மகிமையான எழுப்புதல் வரக் காத்திருக்கிறது! அதைத் தடுக்க சத்துருவாகிய பிசாசானவன் தீவிரவாதச் செயல்களைக் கட்டவிழ்த்து விட்டு, கலவரங்களினாலும், அநியாயமாகச் சிந்தப்படுகிற இரத்தத்தினாலும் அந்தப் பகுதிகளை தீட்டுப்படுத்த தீவிரிக்கிறான். ஜெபத்தால் மாத்திரமே அவைகளை எல்லாம் முறியடிக்க முடியும்! எனவே,

**மத்தியக் கிழக்கு நாடுகளுக்காக மன்றாடுங்கள்.**

- ஒருங்கிணைப்பாளர்.

## துபாயில் 'இயேசு விடுவிக்கிறார்' கிளை அலுவலகம்!



சகோ. Jonah Jesiah அவர்கள், நமது ஊழியத்தின் துபாய் பிரதிநிதியாக இருந்து வருகிறார்கள்.

**ஜெப உதவிக்கு இவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.** நமது ஊழியத்தின் அனைத்து வெளியீடுகளையும் இவர்களிடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: Bro. Jonah Jesiah,
Post Box 48767 – Dubai,
United Arab Emirates.
*Ph: +971 50 5516 534.*

Email: br.dubai@jesusredeems.org / jonah@eim.ae


**அவசர ஜெப உதவிக்கும் மற்றும் ஆலோசனைகளுக்கும்: +971 4255 4003.**

துபாய் - 12 மணி நேர உபவாச ஜெபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...



'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்திற்காக, பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி ஊழியத்திற்காகக் கொடுத்து தாங்க விரும்புகிறவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**A/C Name: Jesus Redeems Ministries, Bank Name: Commercial Bank, Colombo-7.**
**A/C No: 15000 23 755. Swift Code: CCEYLKLX.**

'இயேசு விடுவிக்கிறார்' வழங்கும்

## 2016ம் ஆண்டிற்கான

வாக்குத்தத்தங்கள் அடங்கிய

**BIBLE LAND காலண்டர்!** (தமிழ்)

- எமது வத்தளை மற்றும் கிளிநொச்சி கிளை அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்!
- தேவைப்படுகிறவர்கள் உங்களது தொலைபேசி எண்ணுடன் கூடிய தெளிவான முகவரியுடன் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.



காலண்டர் ஒன்றுக்கு

நேரில் பெற **100/- ரூபா**

தபாலில் பெற **150/- ரூபா**

Online Purchase:
www.jesusredeemsonline.com
www.jesusredeems.com

## இலங்கையில் 'இயேசு விடுவிக்கிறார்' பத்திரிக்கை!

உங்கள் கைகளில் தவழும் இந்த, 'இயேசு விடுவிக்கிறார்' பத்திரிக்கை இலங்கை தேசத்திலேயே அச்சிடப்பட்டு, உங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இன்னும் ஒருசில மாதங்களில் **சிங்கள மொழியிலும் பத்திரிக்கை வெளியிட இருக்கிறோம்.** இதற்காக **ஜெபித்துக் கொள்ளுங்கள்.**

இந்தப் பத்திரிக்கைக்கு சந்தா எதுவும் கிடையாது. "கேட்கிற யாவருக்கும் பத்திரிக்கை அனுப்பு..." என்ற கர்த்தருடைய கட்டளையின்படியே, விரும்பிக் கேட்கிறவர்களுக்கு மட்டும் இந்தப் பத்திரிக்கை அனுப்பப்பட்டு வருகிறது. இந்தப் பத்திரிக்கை ஊழியத்திற்கென்று கொடுத்துத் தாங்க, நீங்கள் கர்த்தரால் ஏவப்பட்டால், **கொடுத்துத் தாங்கலாம்.** கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! - **உங்கள் சகோதரன்.**



## வாங்கி விட்டீர்களா?

2016ம் ஆண்டிற்கான வாக்குத்தத்தப் பாடலோடு கூடிய பாடல் ACD

*கூட இருப்பவர் இயேசு* (Vol-23)

நேரில் பெற **100/- ரூபா**

தபாலில் பெற **150/- ரூபா**



*உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை பெலனடைய இன்றே வாங்கி, கேட்டு பயனடையுங்கள்.*

எமது வத்தளை மற்றும் கிளிநொச்சி கிளை அலுவலகங்களிலும் பெற்று கொள்ளலாம்

Online Purchase: **www.jesusredeemsonline.com www.jesusredeems.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சிறையிருப்பு மாற வேண்டுமா?

# தேசத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

## வத்தளையில்

கெத்செமனே
ஜெப மையம்
GETHSEMANE
PRAYER CENTRE

**தினமும் காலை 9:00 மணிமுதல், மாலை 6:00 மணிவரை.**

தனியாக... குழுவாக... சபையாக... ஜெபிக்கலாம்...

இதர ஊழியங்கள்!

| பெண்கள் ஜெபம்! | உபவாச ஜெபம்! | சினெர்ஜியா | Kids Fellowship |
|---|---|---|---|
| | | வாலிபர் கூட்டம்! | சிறுவர் ஜெபம்! |
| (வியாழக்கிழமைதோறும்) | (சனிக்கிழமைதோறும்) | (2வது சனிக்கிழமைதோறும்) | (3வது சனிக்கிழமைதோறும்) |
| 10:00 A.M. - 1:00 P.M. | 10:00 A.M. - 1:00 P.M. | 4:00 P.M. - 5:00 P.M. | 3:00 P.M. - 4:00 P.M. |

சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களின் செய்திகள் அடங்கிய சி.டி.க்கள், புத்தகங்கள் கிடைக்கும்.



அன்புடன் அழைக்கும்,

## சகோ. மோகன் சி. லாசரஸ்

தேசத்திற்காக ஜெபிக்கவும், ஆவிக்குரிய ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளவும் வாருங்கள்!

கிளை அலுவலக முகவரி: *57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA.*

உங்கள் அவசர ஜெப அழைப்பிற்கு **011 - 2930 152** என்ற எண்ணிற்குத் தொடர்பு கொள்ளவும்.

கொழும்பில்

இயேசு விடுவிக்கிறார்

# அற்புதத்தின் இரவு!

நாள்: **2016 ஏப்ரல் 24** (ஞாயிறு)
நேரம்: **மாலை 5:30 மணிக்கு.**

இடம்: **விஹாரமகா தேவி திறந்த வெளி அரங்கம், கொழும்பு.**



தேவ செய்தியும், ஜெபமும்:

## சகோ. மோகன் சி. லாசரஸ்.

அனுமதி இலவசம்!

வியாதி, கவலை, கண்ணீர், பாவம் உள்ளிட்ட பல பிரச்சனைகளில் சிக்கி, கலங்கித் தவிக்கிறீர்களா?

**அற்புதங்களை அனுபவிக்க வாருங்கள்!**

Contact: **Jesus Redeems Ministries, 011-2930 152, 071 4371111**

**For sms : 076 6612020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவில்

இயேசு விடுவிக்கிறார்

# விடுதலை பெருவிழா-2016

நாள்: 2016 ஏப்ரல் 15,16,17
(வெள்ளி, சனி, ஞாயிறு)
நேரம்: தினமும் மாலை 5:30 மணிக்கு.

இடம்:
நகர சபை மைதானம்,
வவுனியா.



விடுதலையின் தேவ செய்தியாளர்கள்:

**சகோ. மோகன் சி. லாசரஸ்,**
**சகோ. A. அப்பாத்துரை.**

பாவம், வியாதி, பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலை பெற வாருங்கள்!

Contact: Vavuniya Pastor's Fellowship, Pr. Raymond-077 616 3332, Pr. Chandra kumar-0777 10 93 564.

---

**காலியில்**

இலங்கை தேசத்திற்காக ஜெபிக்க...

# 3 நாட்கள் திறப்பின் வாசல் உபவாச ஜெபம்-2016

நாள்:
2016 ஏப்ரல்
21,22,23.

நேரம்:
காலை 9:00 - மாலை 6:00.

இடம்:
சமநல மைதானம்,
காலி.

தேவ செய்தியும், ஜெபமும்:

**சகோ. மோகன் சி. லாசரஸ்,**
**சகோ. வின்சென்ட் செல்வக்குமார்,**
**சகோ. ஜாண் பாலக்குமார்.**



இலங்கை தேசத்தின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்க வாருங்கள்!

Contact: Galle Pastor's Fellowship, Pr. Jothymuni-077 384 9900, Pr. Manoj kumara-077 395 2929.

PRINTED BY McLEAN PRINTERS (PVT) LTD. 232 DAM STREET, COLOMBO 12
Registered in the Department of Posts of Sri Lanka under QD/185/News/2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org